www.tamilarangam.net

# சர்வதேசதமிழர்

SARVADESA TAMILER 1997 DEC/ Vol.4,Nr.10



BRUNEI புருணை
DARUSSALAM




**Capital:** Bandar Seri Begawan
**Currency/Exchange Rate:**
Brunei Dollar (Br$)
1.46 = US$ 1.00
**Main airport/distance to city:**
Brunei Intl. Airport, 10km
**Language:** Malay
**Average Temperatures (°C):**

| Jan: | Apr: | July: | Oct: |
|---|---|---|---|
| 27 | 27 | 27 | 27 |

**ழமண்ணின் கிழக்கே குன்றில் இந்துசமுத்திரம்நோக்கியபார்வை**
**ஆழக்கடல்போல் எங்கள்தீரா ஆர்வம்கொண்டே உம்மைக் காண**
**வழம்,தாயை வேண்டிஓடல்போல் விண்ணில்பறந்து தேடிவருவோம்**
**ாளை விடியும் நம்துயர்அகலும் நின்முகம்காண்போம் கோணேஸ்வரரே!**



நோர்வே பிரதமர்:செலமங்ன புன்னவிக்கின்
சமூகபெறுமதி கமிசன்:உலகுக்கு முன்மாதிரி!

**லண்டனிலிருந்து நோர்வே,டென்மார்க்குக்கு ஒரு நல்லெண்ண விஜயம்!**
டாக்டர்.ராணி கனகசுந்தரம்,புதல்வர்கள் ரஞ்சித், நிமலன், லண்டன் போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்டபொறியியலாளர்: சோ.கனகசுந்தரம், திருமதி பவளம் ராஜரட்ணம்



தமிழர்களை முன்னேற்றம்,ஐக்கியம் கருதி ஒன்றிணைக்கும் நோர்வே தமிழ்ச்சஞ்சிகை!
Norway Tamil magazine to co-ordinate the Tamils for advancement & solidarity!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலாபநோக்கின்றி சேவைநோக்கில் ;பலரது அரசியல்,சமூக,சமய,கருத்துக்களைத்தாங்கிவரும் நடுநிலைச்சஞ்சிகை இது.
ஜனநாயகம்,மனிதஉரிமை,சுதந்திரம்,சமாதானம்,நீதியுடன் கூடிய தமிழர் முன்னேற்றம்,ஐக்கியம் கருதுவதே நம் பணி!
பன்னாட்டு,தமிழ்எழுத்தாளர்,கல்லூரி,பொது நூலகங்கள் ,அரசியல்கட்சிகள்,சங்கங்கள்,பத்திரிகைகட்கு இலவசசந்தா உண்டு.

குழந்தை-குடும்ப அமைச்சு:

# குடும்ப-குழந்தைக்காப்பகம் -உங்கட்கு ஏற்றதா?

உங்கட்கு சிறுகுழந்தைகள் உள்ளனரா?குழந்தைக்காப்பக தேவையுண்டா?
மற்ற குடும்பங்கட்கும் அத்தகைய தேவையுண்டா, எனத்தெரியுமா?
பகலில் குழந்தைகளைப்பராமரிக்க ஏற்ற வீடு உங்களிடம் உண்டா?அப்படியாயின் குடும்பகுழந்தைக்காப்பகம் உங்கட்கு ஏற்றதாக இருக்கலாம்.

குடும்பகுழந்தைகள் காப்பகத்தில் 5குழந்தைகள் வரை பராமரிக்கலாம்.தனியார்வீடுகளில், பாதுகாப்பான முறைகளில் முகாமை நடைபெறும்.

அங்கு நீங்களாகவே தொழில்புரியலாம், அல்லது வேறு ஒருவரை உதவியாளராக நியமிக்கலாம். குழந்தைக்கல்வி-ஆசிரியர் ஒருவர் கல்வி வழிகாட்டலும் தருவார்.
குடும்பகுழந்தைக்காப்பகங்கள் அரச முகாமைநிதிஉதவி பெறும்


குடும்ப-குழந்தைக்காப்பகத்தை கொம்யூன் அங்கீகரிக்கவேண்டும். குழந்தைகாப்பக ஆலோசகரை மேலும் தகவல்பெற தொடர்புகொள்க!

-அரசதகவல்சேவையால் வழங்கப்பட்டது. அ-26-97

BARNE- OG FAMILIEDEPARTEMENTET

## Familiebarnehage - noe for deg?

Har du små barn og behov for barnehageplass? Vet du om andre familier som også trenger det? Har du et hjem som er egnet for å ta imot barn på dagtid? Da er kanskje familiebarnehage noe for deg!



I en familiebarnehage kan barnegruppen være på inntil fem barn, og driften foregår under trygge former i private hjem.

Du kan arbeide der selv eller ansette en annen assistent. En førskolelærer skal gi pedagogisk veiledning.

**Familiebarnehager får statlig driftstilskudd.**

Kommunen skal godkjenne familiebarnehagen. Ta kontakt med barnehagekonsulenten for mer informasjon!

Innrykket av Statens informasjonstjeneste

A-26/97



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேசதமிழர் சனநாயகத்தமிழர்களின் கொள்கைமுரசாக விளங்கும். வாசகர்கருத்துக்கள் மிகமிக வரவேற்கப்படும்! ஆக்கங்களை மீள்பிரசுரம் செய்யின் இச்சஞ்சிகையை குறிப்பிடுக!தங்கள் விமர்சனம்,ஆலோசனைகள் நமக்கு வழிகாட்டும்! ஆக்கங்கட்கு ஆக்கியோரே பொறுப்பு. திருத்திவெளியிட ஆசிரியருக்கு உரிமையுண்டு. முகவரி மாற்றத்தை உடன் தருக!



**தமிழர்களும், களுத்துறைசிறையும்**

1983 சிங்கள வெலிக்கடைச் சிறையில் டாக்டர் ராஜசுந்தரம் உட்பட 54 தமிழ்க்கைதிகள், இனவெறியும்,மிருகக்குணமும் கொண்ட,சிங்களமோடயாக்களால் கொல்லப்பட காவலாளிகள் பார்த்துக் கொண்டேமிருந்தனர். இன்று மீண்டும் அதே சம்பவத்தை,காடையர்கள் சிறையினுள் செய்ய காவலாளிகளும்,இராணுவமும் எதுவுமே செய்யாது பார்த்துக்கொண்டிருந்தமைக்கு முழுச்சிங்களஇனமுமே உலகின் முன் வெட்கித் தலைகுனிய வேண்டும்.கைதாகி இருந்தவர்கள் பெரும்பாலும்,அப்பாவிகளே அதிகாரத்தை,காடைச்சிங்களவர் தம்கையில் எடுப்பதால் தான் முழுச்சிங்கள இனமுமே இன்று உலகின் முன் தலைகுனியவேண்டி வந்துள்ளது.

எதுவித விசாரணையுமின்றி கொழும்பில் தடுத்துவைக்கப்பட்டிருந்த அப்பாவி தமிழர்கள் விசாரணை செய்! அல்லது விடுதலை செய்!! எனக்கூறி உண்ணாவிரதம் செய்ய, அவர்களை அடித்துஉதைத்து பல வந்தமாக உணவை உண்ண வைத்ததுடன் திட்டமிட்டு களுத்துறைக்கு எடுத்துச்சென்று மூவரின் உயிரைப்பறித்ததுடன் பலரை படுகாயமடைய வைத்தமைக்கு,சிங்களஅரசே பொறுப்பு! நீதிவிசாரணை,கமிசன்,தண்டனை எல்லாம் இத்தகைய சம்பவத்துக்கு,பலனளித்ததாக,இல்லை. இஸ்ரேல் தேடித்தேடி,நாசிக்குற்றவாளிகளை இன்றும் தண்டிப்பது போல், விடுதலைப்புலிகள் 1958.லிருந்து தமிழருக்கெதிராக மானிடத்துக்கெதிரான குற்றம் புரிந்தவர்களை பட்டியலிட்டு உரிய நீதிவிசாரணை செய்து தண்டிக்கவேண்டும்!,என்பது பல தமிழ் மக்களின் கருத்து. அப்பாவித்தமிழர்கட்கு இரக்கம் காட்டமறுக்கும் சிங்களமோடயாக்களுக்கு புலிகளின்பாணி சரி!

## புரூணை நாடு பற்றிய சில விபரங்கள்:

**வி.எஸ்.சிவகுமார், பொறியியலாளர், புரூணை**

தெற்காசிய நாடுகளில் புரூணை ஓர் பழம்பெரும் இராசதானியாகும். ஐந்தாம்நூற்றாண்டில்,புரூணை ஒரு இந்து–பௌத்த நாடாக இருந்துள்ளது. இந்த நாட்டின் முதலாவது சுல்தான், சுல்தான் முகமட்ஷா என்பவராவார்: இவர் 14ம் நூற்றாண்டில் இஸ்லாம்மதத்தைத் தழுவினார்:

1571ம் ஆண்டு முதல் புரூனை ஸ்பானிய பிரித்தானிய ஊடுருவலுக்குள்ளாகி 1888ம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டு 1984ம் ஆண்டு ஜனவரி மாதம் சுதந்திரநாடானது. புரூணையின் மொத்த நிலப்பரப்பு 5765சதுர. கிலோ மீற்றர். கரையோர மொத்த நீளம் 161கிலோ மீற்றர். புரூணையைச் சூழ கிழக்கு மலேசியாவின் இருமாநிலங்களான சராவாக், சபா உள்ளன. 1989ம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டின்படி மொத்த சனத்தொகை 249000 ஆகும். இதில் 69வீதம் மலாய் இனத்தவரும் 18 வீதம் சீன இனத்தவரும் மிகுதி பழங்குடியினரும் மற்றையோரும் ஆவார். புரூணையின் மொத்த நிலப்பரப்பில் 80 வீதம் மழைக்காடுகளாகும்.

புரூணையின் தலைநகர் பண்டார் செரி பேகாவான் என அழைக்கப்படுகிறது. தலைநகரின் ஒரு பக்கத்தில் உலகிலேயே மிகப் பெரிய தண்ணீர்க்கிராமம் இருக்கின்றது. இங்கு அதை காம்பொங் ஜயர் என்று அழைப்பார்கள். நீரினுள் மரத்தூண்களை நட்டு அதன் மேல் வீடுகளைக் கட்டி வாழ்கின்றார்கள்.25000 முதல் 30000 வரை மக்கள் இந்த தண்ணீர்க்கிராமத்தில் வாழ்கிறார்கள். தற்போது குடிநீர் மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. நகரின் மையத்திலிருப்பதாலும் புரூணையின் முன்னோர்களின் வசிப்பிடங்களாக இவை இருந்ததாலும் இங்குள்ள மக்கள் போக்குவரத்து வசதியீனங்கள் இருந்தபோதிலும் இங்கிருந்து இடம் பெயர விரும்புகின்றார்களில்லை.

புரூணை துரிதமாக அபிவிருத்தியடைந்து வருவதால் வெளிநாட்டு தொழிலாளர் தொழில் வல்லுனர்களின்: பங்களிப்பு அவசியமாகின்றது. இவ்வகையில் இலங்கையில் இருந்தும் இங்கு பலர் தொழில் புரிகின்றனர். கிட்டத்தட்ட 1000 இலங்கையர் வரையில் இங்கு வாழ்கின்றார் கள். மலேசியா இந்தியா இலங்கையிலிருந்து இங்கு 1500.–2000 வரையிலான தமிழர்கள் வாழ்கின்றார்கள். வருடத்தில் ஓரிரண்டு மட்டுப்படுத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள் ( முக்கியமாக தீபாவளி இரவு) தமிழரிடையே நடைபெறுவதுண்டு.

புரூணையின் பொருளாதாரம் முக்கியமாக எண்ணெய், நிலவாயு போன்றவற்றில் தங்கியுள்ளது. பிரதம மந்திரியும் பாதுகாப்பு அமைச்சருமாக புரூணை சுல்தானே செயற்படுகின்றார். அவரே உலக செல்வந்தர்களில் முதல்வராக தற்போது கணிக்கப்படுவதோடு அவரது பெயரும் மிக நீளமான பெயராகும்.

PADUKA SERI BAGINDA SULTAN HAJI HASSANAL BOLKIA MUIZZADDIN WADDAULAH SULTAN AND YANG DIPERTUAN OF NEGARA BRUNEI DARUSSALAM



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோர்வேயில் தமிழ்மாதசஞ்சிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.பதிவு இல:90/310-ரி.1.எஸ்.சர்வதேசதர தொடர்இலக்க நிலையம் யுனெஸ்கோ,பாரீஸில் பதிவுசெய்யப்பட்டது.இல.0805-7443.கணணியால் பிழையின்றி எழுதிய ஆக்கம் உடன் பிரசுரமாகும். தரமான ஆக்கங்கள்(பேட்டி,கவிதை,சிறுகதை,கட்டுரை)புகைப்படங்கள், மாதாமாதம் அனுப்புவோர்க்கு இலவசசந்தா உண்டு.

# சர்வதேசதமிழர் சந்திப்பு களம்:

**மதிப்புக்குரிய ஆசிரியருக்கு,**

சர்வதேச தமிழர்-தமிழகச் சிறப்பிதழ் நண்பர்கள் மூலம் கிடைக்கப்பெற்று ஆச்சர்யத்தில் ஆழ்ந்தேன். தமிழ்ச் செய்திகளையும், தமிழ்ப்படைப்புகளையும் உலகம்அறிய வெளிவந்துகொண்டிருக்கும் உன்னதஇதழைக்கண்டு வியந்தேன்.இவ்விதழில் பலபடைப்புகள் சிறப்பாகஇருந்தன.எனினும், திருமதி.வி.மாசிலாமணியின் எங்கும் பாட்டு ..எதிலும் பாட்டு!, மதுரபாரதியின் தமிழ்சிறுகதைகள்-இன்று, நெஞ்சைநெகிழவைத்த என்.எஸ்.பிரபு,பொன்.சிவா கவிதைகள் குறிப்பிடத்தக்கவை!

தங்களை நன்றியோடு மதிக்கும் அன்பன்........**செய்யாறு வி. பாலு,** கவிஞர்,திரைப்படஉதவிஇயக்குனர்,தமிழ்நாடு

**அன்பு ஆசிரியநண்ப,**

1996ஆடிவிடுமுறையில் இலங்கையில் கொழும்பு,பின் வவுனியா புகையிரதநிலையத்தில் சந்தித்து நாம் அளவளா வியதால் சர்வதேசதமிழர் அறிமுகம் கிட்டியது. புரூணை நாட்டில் தொழில்நிமித்தம் வாழ்ந்துவரும் தமிழர் மத்தியில், கிரமமாக நமக்கு கிடைத்துவரும் சர்வதேசதமிழர் நல்லவரவேற்பை பெற்றுவருகிறது. குடும்பத்து டன் நான் அவுஸ்திரேலியா குடியேறுவதால் சஞ்சிகைக்கு புதிய சர்வதேசஇணைப்பாளராக யாழ்.கொக்குவில் (கிட்டு) ஏ.கிருஷ்ணராஜா அவர்கள் பொருத்தமானவரென பிரேரிக்கிறேன்.இவர் இங்கு நடக்கும் கலை,கலாசார, சமயவைபவங்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்பவர்!அத்துடன் இங்குவாழும் தமிழர் மத்தியில் அறிமுகமானவர். செல்லமாக கிட்டு என்றே அவரை எல்லோரும் அழைப்போம்.

இத்துடன் புரூணை நாட்டைப்பற்றிய கட்டுரையை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளவிரும்புகிறேன். உங்கள் முயற்சி நல்முயற்சி ஆவதோடு,இலங்கையில் பாரம்பரிய தமிழ்பிரதேசங்களில் மீண்டும் தமிழர் தன்மானத்தோடும் சுயகெளரவத்தோடும் வாழ்வதற்கு இறைவனின் ஆசியும் கிட்டவேண்டும் என சகலரும் பிரார்த்திப்போமாக!

-அன்புள்ள ....................................**வி.எஸ்.சிவகுமார்,** பொறியியலாளர்,புரூணை

(திரு.கிட்டுவை புரூணையின் நல்லெண்ணதூதுவராக,பணிபுரியும்படி,அன்புரிமையுடன் வேண்டுகிறோம். அத்துடன் புரூணை சிறப்பிதழ் ஒன்றை புரூணைதமிழர்கள் உதவியுடன் தயார்செய்துதவுங்கள்-ஆ.ர்)

**அன்புடையீர்,**

வணக்கம்! கடல்கடந்தும் தமிழுணர்வுகொண்ட தாங்களை இக்கடிதம்வாயிலாக தொடர்புகொள்வதில் மகிழ்வ டைகிறேன்.நான் ஒரு வளரும் பத்திரிகையாளன்.தமிழ்மொழிசிறப்பு,வெளிநாட்டு தமிழர்அமைப்புகள்,செயல்பாடுகள் பற்றி கட்டுரைகள் எழுதிவருகிறேன். பன்னாட்டு தமிழ்சங்கங்களின் பணிகள் பற்றி அவ்வப்போது அவரவர் சற்று எழுதினால் மகிழ்ச்சியடைவோம்................**சி.சாம் டேவிட்,** இராணிப்பேட்டை, வேலூர், தமிழ்நாடு

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

லண்டன்,நோர்வே,டென்மார்க் நாடுகட்கு விஜயம் செய்தநாட்களை நாங்கள் நன்றாக அனுபவித்து மகிழ்ந்தோம். தங்கள் உபசாரத்துக்கும் மிகவும் நன்றி. இத்துடன் சிட்னிப்பல்கலைக்கழக தமிழ்ச்சங்க 3வது ஆண்டுமலரான கலப்பை-சஞ்சிகையை அனுப்பி,அறிமுகம்செய்யவிரும்புகிறேன். காலாண்டிதழான இதனை நான் தங்கட்குத் தொடர்ந்து அனுப்பிவைக்கிறேன். நோர்வே வந்து உங்கள் அனைவரையும் சந்தித்தது மிகவும் சந்தோசம்!

-அன்பான வாசகி......................**திருமதி.பவளம் இராசரட்ணம்,** ஸ்றாத்பீல்ட், நியு சவுத் வேல்ஸ்,அவுஸ்ரேலியா

(அவுஸ்ரேலியாவின் நல்லெண்ணதூதுவராக பணிபுரியும்படி அன்புரிமையுடன் வேண்டுகிறோம்.அத்துடன் அவுஸ்ரேலியசிறப்பிதழ் ஒன்றையும் அவுஸ்ரேலியத்தமிழர்கள் உதவியுடன் தயார்செய்துதவுங்கள்-ஆ.ர்)

**அன்பின் ஆசிரியருக்கு,**

அமெரிக்கஅரசு விடுதலைப்புலிகளை தடைசெய்திருப்பதை,ஈழதேசியசனநாயக விடுதலைமுன்னணி வன்மையாக கண்டிக்கிறது.உலகில் அழிக்கப்படும்,இனங்களை காக்கப்போராடும் விடுதலைஇயக்கங்களை,தடைசெய்யுமுரிமை அமெரிக்காவுக்கு கிடையாது. தமிழர்போராட்டம்,அவர்தம்விடுதலையுடன் சம்பந்தப்பட்டது. தமிழர் அழிப்புக்கு அமெரிக்கா நேரடியாக துணைபோவதுதான் இந்த தடைஉத்தரவு!கதிர்காமர் போன்ற இனத்துரோகிகட்கு இது சாதனையாகலாம்.ஆனால் ஈழதமிழர் மனங்களில் இருந்து விடுதலையுணர்வை தடைசெய்யமுடியாது!நாம் ஒற் றுமையை தொலைத்ததன் விளைவே இதுபோன்ற தடைஉத்தரவுகள்! போராளிகளின் கொள்கையில் மாற்றம் தேவை!ஒன்றுபட்டபோராட்டத்தை இனியாவதுஉண்டாக்குவது முக்கியம். அனைவரும் அமெரிக்கசர்வாதிகார போக்கை கண்டிக்க ஒன்றுபடுக!என ஈழதேசிய சனநாயக விடுதலைமுன்னணி-மத்தியகுழு வேண்டுகிறது.

-**வீ.இராமராஜ்,** ஐரோப்பியஅமைப்பாளர்,மத்தியகுழுஉறுப்பினர்-ஈழதேசியசனநாயக விடுதலைமுன்னணி,லண்டன்
V.Ramaraj,EN.D.L.F.6,Green Bank Cavendish ave,Harrow,Middx,HA1-3RE,U.K. Tel.181.4265862

**அன்புச்சகோதரருக்கு,**

தீபஒளிசிந்திய தீபாவளி வாழ்த்துக்களை என் மனம்திறந்து வாழ்த்துகிறேன்.எம் இனிய தீபாவளி வாழ்த்துகள்!

-அன்புடன்.........................................**சுப்பிரமணியம் மு.சசிக்குமார்,** குலிம்,கெடா,மலேசியா

**அன்பின் ஆசிரியருக்கு,**

இலங்கை மட்டக்களப்பை சேர்ந்த மாணவர் ஒருவர் கிழக்கு-சர்வகலாசாலை நூலகத்தில், சர்வதேசதமிழரில் என் முகவரியைக்கண்டு இங்கு உதவிகேட்டு எழுதினார்.யுத்தத்தால் பாதிப்படைந்த தம்குடும்பம் கஷ்டத்தில் இருப்பதால் தன்மேற்படிப்புக்கு உதவும்படி கேட்டிருந்தார்.நானும் நண்பர்களும் பணம் சேகரித்துஅனுப்பினோம்.

அன்புடன்.... **த.புவனேந்திரன்,**இணைப்பாளர்,Holzener Weg 27,58239 Schwerte,GERMANY. Tel.02304 82811

(பொதுவாக தமிழ் ஈழத்திலும், குறிப்பாக மட்டக்களப்பிலும்(2800 விதவையர்) பல்லாயிரம் விதவையர் குடும்பம் தவிப்பதாக செய்திகள் கூறுகின்றன.அவர்தம் வாழ்வுக்கு புதிய சீவனோபாயங்களும்,நிதிஉதவியும்,வழிகாட்டலும் அளிக்கவிரும்புவோரை,சர்வதேசதமிழர் ஒருங்கிணைக்கும்! ஆர்வமுள்ள,சகலதரப்பும் உடன்தொடர்புறுக!.ஆர்)

இலங்கையின் சகல,தமிழ்அரசியல்கைதிகளையும் உலகமனச்சாட்சியின்,கைதிகளாக பிரக டனம் செய்கிறோம்!சகலஅமைப்புகள்,(சர்வதேசமன்னிப்புசபையுட்பட),பத்திரிகைகள் இப்படி பிரகடனம் செய்து,உலகமனச்சாட்சியையும்,இலங்கையின்,மனச்சாட்சியையும் தட்டிஎழுப்புக!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## லண்டனிலிருந்து நோர்வேக்கு ஒரு நல்லெண்ண விஜயம் : சிரேஷ்ட பொறியியலாளர் சோ.கனகசுந்தரம் அவர்களுடன் ஒரு கருத்தான பேட்டி!

ஐரோப்பாவில் வாழும் தமிழர்கள் தம் உற்றார், உறவினர், நண்பர்களிடம் இடையிடையே விஜயம் செய்து மகிழ்வதுண்டு.கோடை விடுமுறையில் காரில் செய்யும் பயணம் களிப்பையூட்டும்.ஆங்காங்கு காரை நிறுத்தி,கடலிலோ,ஆற்றிலோ குளித்து, கட்டி வந்த உணவுப்பொட்டலங்களை பிரித்து ஆறாத பசியுடன் சாப்பிட்டு,குளிர்பானம் அருந்தி நகைச்சுவையாகப்பேசி மகிழ்வதே ஒரு அலாதியான அனுபவம் அல்லவா! ஈழத்தமிழர்கள் அனேகமாக ஐரோப்பாவின் முக்கிய நகரங்களில்,ஏன் சிலசமயம் வடமுனைக்கருகேயுள்ள கிராமங்களில் கூட தொழில்காரணமாக வதிகிறார்கள். அவர்களிடம் உறவினர்கள் வருவதென்றால் சிறார்கட் கெல்லாம் ஒரே கொண்டாட்டம்!ஒரே மகிழ்ச்சி!! நீண் டகாலங்கட்கு பின் பிரிந்தார் கூடினால் சொல்லவும் வேண்டுமோ?ஆகா! அது ஒரு ஆனந்தமே!!

அந்தவகையில் கடந்த ஆகஸ்ட் விடுமுறையில் லண்டனிலிருந்து, எம் உறவினரும், பிரிட்டிஷ் போக் குவரத்துஅமைச்சின் சிரேஷ்ட பொறியியலாளருமான சோ.கனகசுந்தரம் அவர்கள்,தம் துணைவியார் டாக்டர் இராணி,அவுஸ்ரேலியாவிலிருந்து விடுமுறையில் வந்த மைத்துனி,திருமதி பவளம் இராசரட்ணம்,புதல்வர்கள் (மூத்தபுதல்வர் டாக்டர் மோகன் தம்பதியர் தொழில் காரணமாக வரமுடியவில்லை)நிமலன், ரஞ்சித், (இரு வரும் பல்கலைக்கழகமாணவர்கள்)நோர்வே,டென்மா ர்க்குக்கு ஒரு நல்லெண்ணவிஜயம் ஒன்றை காரில் மேற்கொண்டு அருமையாகக் களித்தனர்.லண்டனிலிரு ந்து நியுகாசில் வந்து பின் கப்பலில் பேர்கன் வந்து, ஸ்திறின் வந்து தங்கி அங்கு கடாங்கர்விட்டா,போன்ற இடங்களை ரசித்து ட்றம்மன் நகர், ஸ்பிராலன் கண்டுகளித்து, சிலநாட்கள் ஒஸ்லோவில் தங்கி, ஒஸ் பார்த்து, மொஸ் வழியாக டென்மார்க் (பிரெடெறிக்ஸ் கவன்,கேர்ணிங்) சென்று ஆங்காங்கு உறவினர்களை கண்டு மகிழ்ந்து நாடு திரும்பினர்.

1963ல் உயர்படிப்புக்கு லண்டன் சென்ற இவர், யாழ்.கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதி, ஆசிரியர்கள் திரு.க.சோமசுந்தரம்,திருமதி தங்கம் அவர்களின் 2ம் புதல்வர்!16.12.1940ல் பிறந்தஇவருக்கு காந்தியம்,அமரர் டாக்டர் ராஜசுந்தரம் உட்பட 4சகோதரர்,1சகோதரியும் உடன்பிறப்புகள்! அன்பு,அறிவு,பண்பு,உதவி,சேவை என்பவற்றால் பிறர்மதிப்பை பெற்ற இவர் அடுத்த சகோதரர் பாலசுந்தரத்துடன்(சிரேஷ்ட பொறியியலாளர்) அதே அமைச்சில் அதே மாடியில் பணிபுரிவது ஆச்சரியம் தருவது! அவருடன் ஒரு பேட்டி இதோ:

கேள்வி:வாழ்வில் நீங்கள் விரும்புவது......?

பதில்: தாயுமானவர் கூறியதுபோல்....... நோயுற்றுஉழலா மல், நொந்துமனம் வாடாமல்,பாவிற்கிடவாமல், பாவி யேன் இக்காயத்தை, ஓர்நொடியில் நீக்கி,ஒன்போரில் ஐயா,நின் சேவைக்குள் வைப்பாய் தெரிந்து...இதுவே இறைவனை நான் வேண்டுவதும்!விரும்புவதும்! அன்பு,தயை,கொடை,மனசாட்சி நிறைந்த உலகத்தைக் காணவே நான் விரும்புகிறேன்.

கேள்வி:நோர்வே பற்றி தங்கள் அபிப்பிராயம்...?

பதில்: லண்டன் சனநெருக்கம், வாகனநெருக்கடி கூடிய இடம்.சுவாத்தியம் பரவாயில்லை.நோர்வே குளிர் கூடியநாடு,சனம் குறைவு,அமைதி கூடிய நாடு!மலை, மழை,காடு,ஆறுகள் கூடியநாடு.சூழல்பாதிப்பு குறைவு போல தெரிகிறது. லண்டனைவிட பாதிசனம் நோர்வே முழுவதும் இருக்கிறார்கள் என எண்ணுகிறேன்.வீடுக ள் நெருக்கமாக இன்றி பரவலாக உள்ளன.இவர்கள் பரந்தமனப்பான்மையுள்ளவர்கள் என எண்ணுகிறேன். பிரிட்டிஷ்காரன் உலகம் ஆண்டசாதி! அந்த ஆண்ட உணர்வு இன்னும் உண்டு.ஸ்கண்டிநேவியர்கள் உல கைஆண்டதில்லை. மனிததன்மை கூடஉள்ளவர்கள்! நாம் சேர,சோழ,பாண்டியர் ஆண்ட பழைமையை உயர்த்திப் பேசுவதுபோல் பிரிட்டிஷ்காரனுக்கும் அது உண்டு.ஆனால் எம்மொழி,சமயம் தொன்மையானவை அவற்றை நாம் எங்குவாழினும் பாதுகாக்கவேண்டும். எம்மிடமுள்ள அந்நியமொழிமோகம் ஆபத்தானது.

கேள்வி: சுதந்திரம் என்பது.........?

பதில்: மனதிலுள்ள அடிமைத்தனம் முதலில் போவது தான் சுதந்திரம்! சுதந்திரம் நாமாகப்போராடிப்பெறுவது. தானாக யாரும் தரப்போவதில்லை. சுதந்திரம் என்பது யாருக்கும் பயந்து வாழாமை!எனக்கூறலாம்.அடக்கு முறையை ஏற்காமை சுதந்திரம்.தமிழர்கள் சுதந்திரஉ ணர்வுள்ள இனமாகத்தான் உலகில் வாழ வேண்டும். இலங்கையில் 1950கட்கு பின் பிறந்தவர்களிடம் அடக் குமுறை காரணமாக சுதந்திரஉணர்வு,வீரஉணர்வு, போர்க்குணம் கூட உண்டு. தமிழீழத்துக்கு போராடு பவர்களின் வீரம்,தியாகத்துக்கு நாம் தலை வணங்க வேண்டும்.

கேள்வி:தமிழினத்துக்கு ஒரு நாடு வேண்டுவது பற்றி

பதில்:மொழி,கலாசாரத்துக்கு முதன்மை கொடுத்து அழியாத உணர்வுகளுடன் நாம் வாழ ஒரு சுதந்திர நாடு அவசியம் தான்.பிரிட்டிஷ்தமிழர் அதை எப்போ தோ,உணர்ந்துள்ளனர்.அதனால் ஆதரவும்தருகின்றனர்.

கேள்வி:சிங்களவரின் அடிப்படை பிரச்சனை என்ன?

பதில்:தமிழர் குறித்த மனப்பயம்!முழுவதையும் கைப்பற்றிவிடுவார்களோ? என்ற பயம்!இந்தியாவின் பங்கு இந்தப்பயத்தை நீக்கல்!ஆகும்.

சிலசமயம் தென்ஆசியா,ஐரோப்பாபோல் தடைகள் நீங்கி ஒன்றுபடின் தமிழர்மீது சிங்களவர்ஆதிக்கம்,பயம் குறைய வாய்ப்புண்டு.

கே:உலக தமிழரின் தற்போதைய பணி என்ன?

ப:உலகஇலக்கியங்களை,தமிழ்நூல்களை பன்மொழியில் பாண்டித்தியமுள்ள தமிழர்கள்மொழிபெயர்க்கவேண்டும். எம்மையும்,எம்சமூகத்தையும் பாதுகாத்தல் முக்கியம். பிள்ளைகளை நட்பு,அன்பு,இரக்கத்துடன் நடத்துக! பிள்ளைகட்கு அடித்தல் கூடாது. புத்திசொல்லித்திருத் தல் வேண்டும்.சில முக்கியவிடயங்களில் கட்டுப்பாடு இருக்கலாம்.அதிககட்டுப்பாடு கூடாது.ஓரளவு பெற்றா ரும் விட்டுக்கொடுக்கவேண்டும்!

–என்.எஸ்.பிரபு

சர்வதேசதமிழருக்கு சந்தாதந்தோர்க்கு இதயபூர்வநன்றிகள்!மற்றையோர்தொடர்ந்து பெற விரும்பின் சந்தா தந்து ஆதரவு தருக ! உலக தமிழ்பத்திரிகை/சஞ்சிகைகள்,நூல்கள் மாற்றுத்திட்டத்தில் பங்குகொள்ளவிரும்பின் உங்கள்வெளியீட்டை அனுப்புக! முகவரியுடன் அறிமுகமாகும்! சர்வதேச தமிழரையும் உங்கள் இதழில் முகவரியுடன் அறிமுகம் செய்ய மறக்கவேண்டாம் !



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அன்புள்ள ஐயா,**

நான் மிகுந்தகஷ்டநிலைமிலிருந்து என் தாயாரின் கடும்உழைப்பினால் கல்விச்செல்வம் கிடைக்கப்பெற்று,இன்று வாழ்வின் முன்னேற்றப்படிகளில் அடியெடுத்துவைத்துள்ளேன்.நான் ஓர்இலட்சியத்தோடு வாழ்கிறேன்.ஏழ்மையில் வாடும் ஏழைமாணவ–மாணவியர்க்கு,தரமானகல்வியை வழங்கி அவர்கள்வாழ்வில் ஒளியூட்டவிரும்புகிறேன். இதன்பொருட்டு நல்லகல்வி நிலையங்கள் தமிழ்நாட்டில் தொடங்கவிரும்புகிறேன்.ஆவலுமுள்ளோர் தொடர்புறுக! தங்கள் உண்மையுள்ள,.... **கோ. வினோத்குமார்,** 13B,V.O.C.,2nd st.,Upparapalayam,Kaladipet,Chennai 600019

**அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,**

தமிழகச்சிறப்பிதழை சிறப்பாசிரியர்கள் மாசிலாமணி தம்பதியர் சிறப்பாகவே தயாரித்திருந்தனர்.பாராட்டுக்கள்! தமிழர்களும்–தமிழகமும் ஆசிரியர்கருத்து, தமிழகமக்களுக்கு மிகப்பயனுள்ள அறிவுரையாக அமைந்தது. இன்றைய தமிழகம்–குதிரைவேககண்ணோட்டம் நுட்பமாகவே இருந்தது. எழில்மிகு தமிழ்நாடு காணவாரீர்!–தமிழக சுற்றுலா செய்தி உலகம் முழுவதும் பரவிட வாய்ப்பாக இருந்தது. எங்கும்பாட்டு, கிராமியமணம் கமழும் மண்மக்களின்,குரலாகஒலித்தது.ஆனால் தலைசிறந்ததமிழர்கள் குறிப்பிலிருந்து நான்,சற்றுமுரண்படுகிறேன் பார்ப்பனர்கள் என்றுமே தங்களை தமிழர்கள் என ஒப்புக்கொள்வதில்லை.அப்படியிருக்க தமிழர்அல்லாத பார்ப்பனர்களை தலைசிறந்ததமிழர்கள் என வரிசைப்படுத்தியமை கண்டு அதிர்ந்துபோனேன்.இது கண்டனத்துக்குரியதே!எனவே தமிழ்தெரிந்ததால்,அல்லது தமிழ்நாட்டில்வாழ்வதால்,மட்டும் பார்ப்பனர் தமிழர்கள் ஆகிவிடமுடியாது. உலகம்முழுவதுமுள்ள தமிழர்கள் சர்வதேசதமிழரை, படிப்பதால் தவறானதகவல் வரக்கூடாது என்ற அக்கறையில் இதனை எழுதுகிறேன். உலகத்தமிழர்கள் பார்ப்பனரிடம் கவனமாக இருந்திட வேண்டுகிறேன்.

அன்புடன்,...... **இரா. இரவி,** வடமாசிவீதி, மதுரை,தமிழ்நாடு.

(தமிழ், தமிழர், தமிழ்நாட்டிற்கு அன்பு, நட்பு, இரக்கம், பண்பு, அறிவு, மகிழ்வு, பயன், அமைதி, சேவை தந்த பல பிராமணர்களை நாம் மனிதாபிமானத்துடனும்,தோழமையுடனும் ஏற்றுக்கொள்ளல் அவசியம்!என்பதை நாம் புதிய கொள்கையாக வகுத்துக்கொள்ளாவிடில் ஐக்கியம்,முன்னேற்றம் பேணல் கடினம்! வேற்றுமையில் ஒற்றுமை காண்பது தமிழரின் உயர்வுக்கு உதவும்.மத,இனவேறுபாடு காட்டாது தமிழுக்கு உள்ளன்புடன் சேவைபுரிந்தோர்க்கு கௌரவம் அளிப்பதில் தவறில்லை,இலங்கை மலையகமக்களுக்கு முதன்முதலில் தொழிற்சங்கநடவடிக்கைகளை,1925ல் நடேசஐயர் என்பவரே ஆரம்பித்துவைத்தவர் என்பதும்குறிப்பிடத்தக்கது.–ஆ.ர்)

**திருவருள்முன்னிற்க,**

யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவயோகசுவாமிகள் 125வது ஜெயந்தி ஆடி 25 முடிவடைந்ததைத் தொடர்ந்து யோகசுவாமிகள் திருவுருவம் ஹவாயிருந்து அமெரிக்கா,ஐரோப்பா,ஆபிரிக்கா,அவுஸ்ரேலியா,நியுசிலாந்து,மலேசியா சிங்கப்பூர்,மொறிசியஸ்,சிசல்ஸ் நாடுகட்கு உலகவலமாக எடுத்துச்செல்லப்பட்டு யாழ்ப்பாணத்தில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.இதனையொட்டி அந்தந்தநாடுகளில் விசேடவிழாக்கள் நடைபெறவுள்ளன.அடியவர்களை இதில் கலந்துகொண்டு அருளாசி பெறும்படி வேண்டுகிறோம். அன்பே சிவமயம்! சத்தியமே பரமசிவம்!

இறைசேவையிலுள்ள............. **சாதகர் தொண்டுநாதன்,** Sanmarga Iraivan Temple, 107,Kaholalele rd,Kapaa,Hawaii_96746 USA. Tel.00.1.808.822.3012 Fax.808.822.4351

**அன்புள்ள ஆசிரியருக்கு,**

இலங்கையரசை மறைமுகமாயும், நேரடியாயும் ஆதரிக்கும்நாடுகளுக்கு நாம்கூறவிரும்புவது ,நமது எதிர்ப்பையும் கண்டனங்களையுமே!ஒருதலைப்பட்சமான இந்த ஆதரவு தமிழ்தேசத்தை, மக்களை அழிக்கும்முயற்சிகட்கு ஊக்கம்அளிப்பதாகவே அமையும்.இலங்கையரசு அரைகுறையான தீர்வுப்பொதியை தமிழர்மீது திணித்தாலும், போரை சிங்களபடைகள் தொடரும் அபாயம் உள்ளது. லட்சக்கணக்கான தமிழ் உயிர்கட்கு அப்போதும் பாதுகாப்பு இராது! தமிழகசிறப்பிதழ் கண்டு மகிழ்ச்சி!நன்றி! முனைவர் மாசிலாமணியின் –தும்மல்–கவிதை நல்லகற்பனை!பாராட்டுக்கள்! தமிழகத்திலிருந்து பிறமாநிலங்கட்கு தொழில்தேடி புலம்பெயரும் தமிழர்நிலை வேதனைக்குரியது.அடிக்கடி நடைபெறும் வன்முறை, தாக்குதல்கள் கசப்புணர்வையே வளர்க்கும். இந்தப்பாகுபாடுகள்,மோதல்கள் தவிர்க்கப்பட ஆசிரியர் வேண்டுவது சரியானதே! பாலேந்திரன்–நேர்காணல், நோர்வேஜியர் பற்றி அறியஉதவியது. ஆரையம்பதி சபாரத்தினம் எழுதிய–பிற்பகல்விளைந்த நற்பயன்–சிறுகதை நன்று!நான் தமிழீழ எழுத்துக்களை உண்மைநடப்புகளாய் எண்ணுகிறேன். டயானா,தெரேசா அஞ்சலிக்கவிதைகள் உள்ளத்தை நெருடின. பிரான்சு தமிழர் ஒன்றிணைப்புகுழுவின் கடிதம், தமிழீழவிடுதலைப்போராட்டத்தின் உச்சநிலையில் மேலும் உலகத்தமிழர்ஒத்துழைப்புகோரி வந்தது. உலகத்தமிழர்ஆதரவு ஈழத்தமிழர்க்கு என்றும் உண்டு! ஈழத்து பிரபலஎழுத்தாளரான செ.யோகநாதன் அவர்கள் புதுச்சேரிமருத்துவமனையில் இதயநோய் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ளார்.இதயகுழாய்அடைப்பை சரிசெய்ய அறுவைச்சிகிச்சை செய்யப்படவுள்ளது.இதற்கு இரண்டரை லட்ச ரூபா நிதி தேவைப்படுகிறது. சர்வதேசதமிழர் வாயிலாக உலகெங்கும் உள்ள நண்பர்கள் அறிய உதவும்படி அவர் கேட்டுக்கொண்டதன் சார்பில், அவருக்குதவும்படி அன்புவேண்டுகோள் விடுக்கிறேன். அவரை மருத்துவமனையில் சந்தித்த நாம்–சர்வதேசதமிழர்–சார்பில் நலம்பெற வாழ்த்தி விடைபெற்றோம். அவருக்கு உதவவிரும்புவோர் தொடர்புகொள்க: மே.பா.மா.பாலசுப்ரமணியன், பி.22, முருகேசநாயக்கர்விடுதி 279,திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,சென்னை–600 005 என்றும்நல்மனதுடன்......... **புதுச்சேரி ச. வேல்முருகன்**

**அன்புமிகு ஆசிரியநண்ப,**

நாளுக்குநாள் சர்வதேசதமிழர் அழகு கூடிவருகிறது. படைப்புக்கள் தரமாகஅமைகின்றன. மலேசிய சிறப்பிதழ் செய்ய விழைகிறேன்.மலேசியஎழுத்தாளரின் ஆக்கங்கள்,பேட்டிகள்,மலேசியநாட்டுதமிழர்,அமைப்புகள்,சங்கங்கள் சிறந்ததமிழர், விபரங்கள்,புள்ளிவிபரங்கள்,மலேசிய நகரபடங்களும் அதற்கு சிறப்பூட்டும்!என எண்ணுகிறேன்.

அன்புடன்............................... **சி. அருண்,** 425,Taman Sri Mahsan,72100 Bahau,NSDK,Malaysia(tel.00.60.6.4547415

(மலேசிய சிறப்பிதழுக்கு எழுதிஉதவும்படி மலேசியதமிழர்களை அன்புரிமையுடன் வேண்டுகிறோம்–ஆ.ர்)

கௌரவ சர்வதேச இணைப்பாளர்கள் / நல்லெண்ணத்தூதுவர்கள்:
நோர்வே:ஒஸ்லோ:தி.கிருபா.22.252141;கு.பாலதாஸ் 22.206327பேர்கன்:என்.ஜெயதரன்,றோயலா ,சிவகாந்தன் துரொண்கைம்: த.தியாகலிங்கம் ஸ்ரவங்கர்:அ.பாஸ்கரன்;முபாரக் அலி கிறிஸ்ரியன்சான்ட்:ம.பஸ்ரியன் ஏகசுண்ட்:பொன்.சிவா; துறம்சோ: கே.சிவராஜா; வார்டோ:குகனெறியப்பன்;பேர்லவோக்:ஜ.ரி.ரவீந்திரன் போட்ஸ்பியுட்:க.சுரேஷ்.கரன் பிறத்வோக்: குமார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கேட்டீர்களா சேதி!

1. கிறிஸ்தவமக்கள் சிறுபான்மை கூட்டணிஅரசு ஆட்சிப்பொறுப்பை ஏற்றதும் பிரதமர் செல்மங்ன புன்னவிக் மனிதபெறுமதிகள் குறித்த கமிசன் (25பேர் கொண்டது) தை, 1998ல் நியமிக்கப்பட்டு, சீரழியும் மனித (சமூக) பெறுமதிகளை தூக்கி நிறுத்த,அரசுபாடுபடும்!என குறிப்பிட்டார்.அந்தவகையில் தற்போது பல ஆய்வுகளை பத்திரிகைகள், நிறுவனங்கள் நடத்தி வருகின்றன. நோர்வேயிலுள்ள உயர்பாடசாலையொன்றில் நடாத்தப்பட்ட மனிதபெறுமதிகள் குறித்தஆய்வில் இளைஞர்கள் பின்வரும் விடயங்கட்கு இறங்குவரிசைப்படி முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.1.ஒருவரைஒருவர் கருத்தில்கொள்ளல் 2.பொறுத்தல் 3.நற்பண்பு4.சமூகத்தில் வலுவில்லாதவர்கட்கு உதவல் 5.சூழல்,இயற்கையை பாதுகாத்தல் 6.சட்டத்துக்கு கட்டுப்படலும்,அன்றேல் கடும் தண்டனையும் 7.விரும்பியதை செய்ய சுதந்திரம் 8.வறியநாடுகட்கு உதவலும்,தத்தம் சொந்த பாவனைகளை குறைப்பதும்.

2. சரியான நோர்வேஜியன் என்பது நல்லவனாக இருப்பதே!என முந்தைய பிரதமர் குறுகாலம் புறுண்லாந்த் குறிப்பிடுவார்.ஆனால் நோர்வேஜிய பத்திரிகையான –வேகே–, ஆய்வு ஒன்று எதிர்ப்பதம் தான் சரி! என காட்டுவதாக வாதிடுகிறது. காரணங்கள் இதோ: 69வீதமானோர் வரிகட்டாதசேவைகளைப்பெற விரும்புகிறார்கள். 47வீதமானோர் கடத்தல்மதுவை வாங்கவிருப்பம், 45வீதமானோர் மேலதிகவருமானத்தை அரசுக்கு காட்ட விரும்புவதில்லை, 45வீதமானோர், தவறுதலாக கூடுதலாகவழங்கப்பட்ட மீதிப்பணத்தை கொடுக்கவிரும்புவதில்லை. 15வீதமானோர் தவறுதலாகவழங்கப்பட்ட இரட்டைசம்பளத்தை பேசாமல்வைத்துக்கொள்ளவே விரும்புகிறார்கள், 5வீதமானோர் ஈரக்கசிவுபாதிப்புள்ள வீட்டை ஒன்றும் பேசாமல் விற்கவிரும்புகிறார்கள்.
இதே ஆய்வில் அரசியல்வாதிகள்,உயர்பதவி வகிப்போர் உயர்ந்தஒழுக்கம் கொண்டவராகஇருக்கவேண்டும், என 83 வீதமானோர் கூறுகிறார்கள்.நோர்வே சமூகம் சற்று விறைப்பானதாயும்,கடுமையாயும் வளர்ந்துவருவதாக சுமார் 80வீதமானோர் கூறியுள்ளனர்.சமூகத்தில் சீரழிவு,வன்முறைகள் கூடுவதற்கு பெற்றோரே காரணமாம்! இப்படி பகிரங்கமாக தம்மை தாமே சுயவிமர்சனம் செய்யும்பண்பு நோர்வேஜியர்க்கே உரித்தானது. தமிழர்கள் தம்மைத்தாமே சுயவிமர்சனம் செய்ய பழகுவது முன்னேற்றத்துக்கு அறிகுறியாகலாம் தானே!

3. புதிய நீதி அமைச்சர் திருமதி ஒளட் இங்கர் ஒஉர அவர்கட்கு தமிழ்அரசியல்தஞ்சம் கோருவோர்க்கான நடவடிக்கை குழு சார்பில் திரு.சச்சி மயில்வாகனம் அவசரகடிதம் ஒன்றை 22.10.97ல் அனுப்பிவைத்துள்ளார். அதில் : 20தமிழர் ஏற்கனவே திருப்பிஅனுப்பப்பட்டுள்ளனர்.450பேர் நிராகரிப்பால் திருப்பிஅனுப்பும் அபாயத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.இலங்கையில் தமிழரின் மனிதஉரிமை,சட்டப்பாதுகாப்பு பலவீனமாக உள்ள நேரத்தில் பாரதூரமான மனிதஉரிமை மீறல்கள், காணாமல்போதல், கற்பழிப்புகள், கைதுகள், நீதிவிசாரணையற்ற தண்டனைகள் நடக்கும் சமயத்தில் சர்வதேசமன்னிப்புசபையும் இவற்றை உறுதிசெய்துள்ளதால் தமிழர்கள் திருப்பிஅனுப்படின் மிகுந்த ஆபத்தை எதிர்கொள்வர்.சர்வதேச ம.உ.அமைப்புகள் அல்லது பாராளுமன்றகுழு அங்கு சென்று நிலைமையை உறுதிசெய்யும் வரை சகலர்க்கும் கூட்டு அல்லது குழுவான பாதுகாப்பு கொடுக்கும்படி வேண்டுகிறோம்.நீதி அமைச்சர் சிலரது சித்திரவதை விடயங்களை வாசித்தால் முந்தியஅரசு வலிய அனுப்ப முயன்றவிடயம் ஆச்சரியம் தரும். பழையஅரசு கடும்போக்கை கொண்டிருந்ததாக தற்போதைய பிரதமரும் 21.10.97 கூறியமை குறிப்பிடத்தக்கது. அரசிலுள்ள பிறகட்சிகளுடன் செந்தேர்தல்அணி,சோசலிசஇடதுசாரியுடனும் தமிழ்நடவடிக்கைகுழுவின் அரசியல்தொடர்புகள் இங்கு குறிப்பிடத்தக்கது. பயந்து,நிச்சயமற்ற நிலையில் வாழும் சிலநூறுதமிழர்களை அனுப்பும்முயற்சியை கைவிட்டு வதிவுஅனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். நீதிஅமைச்சு அரசியல்தலைமையுடன் ஒரு சந்திப்புக்கு ஒழுங்குசெய்யவும் வேண்டுகிறோம். (சிறையில் தமிழர்கள் கொலை குறித்து ரி.வி–2வில் வந்த ரெக்ஸ்செய்தியை நீதிஅமைச்சு,வெளிநாட்டார் திணைக்களம்,வழக்கறிஞர் திறிக்வே திவேத்தர்,தேவாலய இடைச்சபை ஸ்ரிக் உற்னம் ஆகியோர்க்கும் சச்சி மயில்வாகனம் அனுப்பியுள்ளார்.(தமிழர் ந.குழு, த.பெ.118, பிளிண்டேன்,0314 ஒஸ்லோ தொலைபேசி: 90517376) (சர்வதேச தமிழர் இதுபற்றிய விடயங்களை நடவடிக்கைகுழுவுடனும்,நோர்வேதமிழ்தஞ்சம்கோருவோருடனும் ஒருங்கிணைக்கும்.மனிதஉரிமைமீறல்,கைது,களுத்துறை சிறையில்தாக்குதல் பற்றிய 2.12.97 வீரகேசரி ஆசிரியர் தலையங்கம் நோர்வே–நீதிஅமைச்சருக்கு தொலைநகலில் அனுப்பப்பட்டுள்ளது. ஆ–ர்)

4.ட்றம்மன் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எறிக் டால்கையுடன் குடியேறியோர் கலந்துகொண்ட உரையாடலில் நோர்வேயின் வெளிநாட்டு கொள்கையில் பின்வருவன முக்கியஇடம்பெறல் உலகமுன்னேற்றத்துக்கும்,அமைதிக்கும்,அவசியமென சர்வதேசதமிழர்–ஆசிரியர் கேட்டுக்கொண்டதை,அவர் மிகக்கவனத்துடன் எழுத்தில் குறித்துக்கொண்டார். வேண்டுதல்கள் வருமாறு: 1.உலகில் வறியநாடுகளில் இடம்பெறும் சண்டைகளை நீதியாக,தீர்க்க நோர்வே மேலும்,அதிகஅக்கறை காட்டவேண்டும். 2.நிதி உதவிகள் வழங்கும்போது தாராளமனமும்,மீள்பலனை எதிர்பாராத,வர்த்தகநோக்கற்ற கொள்கை வேண்டும். 3.வேலையற்ற தொழிநுட்பதிறமைவாய்ந்த நோர்வேஜியரை சேர்த்து தேசியதொண்டர் சேவையை உருவாக்கி வறிய,யுத்தஅழிவுநாடுகளை கட்டி எழுப்ப உதவவேண்டும்.

5.குடியேறியோர்க்கு எதிராக பிரசுரம் அச்சிட்ட இனதுவேசகட்சியான வெள்ளையர் தேர்தல்அணி தலைவர் யக் எறிக் சூஸ்(70வயது)க்கு நீதிமன்று 60நாள் சிறையும்,20000 குரோணர் அபராதமும் விதித்தது.

6.பேர்கன் கிறிஸ்ரியன் மிசெல்சன் நிலையம் நடாத்திய கருத்தரங்கில் இலங்கைமனிதஉரிமை நிலைமையை நன்கு அவதானித்தே நோர்வே,அகதிகள்முடிவை எடுக்கவும்,இலங்கையரசை பேச்சுக்குதூண்டவும் கூறியுளது

பிரிட்டன்:டாக்டர்.செ.ஆனந்தவரதன்181.4270839;ந.பாலமுரளி181.4729336;திருமதி.த.மனோகரன்181.4713060;மு.ஆறுமுகம்
செ.நாகேந்திரன் 181.5532190கனடா:மா.மகிந்தன்;நியுசிலாந்த்:தி.திருநந்தகுமார்,சு.பாஸ்கரன்பின்லாந்த்: இ.சிவலிங்கம் வி.சிவரூபன்
இந்தியா: சென்னை:பேராசிரியர்.வ.மாசிலாமணி/அண்ணா பல்கலைக்கழகம்/44.23517233161;பேராசிரியர்.ஐ.இராமச்சந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## விமர்சனம்:முத்தமிழ் அறிவாலய ஆண்டுவிழா......சுருதி-ஒஸ்லோ

ஒஸ்லோ முத்தமிழ் அறிவாலயத்தின் 3வது ஆண்டுவிழா 5-10-97 அன்று ஒஸ்லோவில் நடைபெற்றது. கண்டுகோண்டோம்! நாம் கண்டுகொண்டோம்!கண்குளிர அங்கு கண்டுகொண்டோம். பாலகர்களின் ஆட்டம் பாட்டம்,கவியரங்கு எல்லாமே அவ்விழாவில் நன்றாக நிகழ்ந்தன. பாலகர்களின் வண்ணாத்திப்பூச்சி பாடல்,ஒற்றுமையுணர்வு போன்ற நிகழ்ச்சிகள் பார்க்க அழகாகவும்,பெற்றோர் உள்ளம் கவர்வனவாயும்,மீண்டும் பிள்ளைகளை பாடசாலைக்கனுப்ப ஊக்கம் தருவதாயும் அமைந்தன.அழகான பாடல்,அபிநயத்துடன் சேர்ந்தே கிராமியநடனம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கவிதாநிகழ்வு வந்திருந்தமக்களின் காதைக்கிழித்தது, என்றே கூறவேண்டும்.கருத்து நன்றாகஇருந்தபோதிலும் கூறியமுறை சகிக்கமுடியவில்லை.எனினும் பிள்ளைகள் தமிழில் காட்டும் ஆர்வம்,சொற்களை உச்சரிப்பு செய்தவிதம் நன்று. அதுமட்டுமன்றி தரமான தமிழில் இவ்வளவு கவித்திறமை காட்டுவதும் நன்றே.

பிரதமவிருந்தினர் தன்சொற்பொழிவை ஆற்றுகையில் மாணவர்கள் சிலர் பேசிக்கொண்டே இருந்ததால் அது இடையூறாக இருந்தது. அவர் என்ன பேசினார்?என கேட்டபோது ஒன்றும் விளங்கவில்லை!என்றனர்.பேசும் தமிழை கேட்பதும்,விளங்குவதும் முக்கியம்!அத்துடன் மாணவர்கட்கு ஒழுங்கு,ஒழுக்கம் முக்கியம்!என்பதை நாம் அனைவரும் உணர்வோமாக. பாடசாலையுடன் பெற்றோரும் இதற்கு பொறுப்பாகவேண்டும். ஒருகிழமை யில் 2மணிநேரம் தமிழ் படித்து தமிழில் எல்லாம் விளங்கிவிடும்!என கருதமுடியாது. எனவே பெற்றோர் இதனை,கவனத்துக்கெடுக்கவும். மற்றைய சகலநிகழ்ச்சிகளும் சிறப்பாக நடந்தன. இலங்கைவானொலி தமிழ்ச் சேவைப்பணிப்பாளர் கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதனின் கச்சேரி தரமான பாடல்களுடன் திறம்பட இடம் பெற்றது.பாடசாலை தொண்டர்கள் ஒரேசீருடையுடன் ஓடி ஓடி கடமைகளை செய்தமை பாராட்டுக்குரியது. இப்பாடசாலை தொடர்ந்து இயங்கி பலஆண்டுவிழாக்களை காணவேண்டும்!என நிகழ்ச்சித்தொகுப்பாளர் தி.திலீ பன் வாழ்த்தினார். இங்கு நோர்வே-தமிழ்இணைவுகூட நோர்வேஜிய மக்களும் தம்ஆதரவை நன்கு நல்கியமை பாராட்டுக்குரியது. வாழ்க முத்தமிழ் அறிவாலயம்! வளர்க அதன்பணி!!

## 13.10.1997 அம்மாவை முதலிலும் அப்பாவை பின்னரும் சுட்டனர்'

(காரைதீவு நிருபர்)

''சம்பவ தினமான 23.9.97 அன்று பகல் 2.30 மணியளவில் துவக்குடன் சுமார் 50 பேர் வந்தார்கள். நாம் எமது வீட்டிலிருந்தோம். வந்தவர்கள் பக்கத்து வீட்டுக்கு நெருப்பு வைத்தார்கள். அது எமது அக்கா பரமேஸ்வரியின் வீடாகும். பின்பு எமது வீட்டிற்கு வந்து என்னை 'நீ வாடா' என அழைத்தார்கள். நான் போனேன். என்னை மாறிமாறி கைகளாலும் கால்களாலும் அடித்தார்கள். உடனே அம்மாவும் அப்பாவும் என்னருகே வந்து கதறினார்கள். ஒருவன் எனது அம்மாவை நோக்கிச் சுட்டான். அவர் நிலைதவறி சரியவே அப்பா கையில் அம்மாவைத் தாங்கிக் கொண்டார். என்னை ஓடுமாறு கூறினார்கள். மறுகணம் அப்பாவையும் சுட்டார்கள். நான் செய்வதறியாது ஓடினேன். சுட்டவர்களைக் கண்டால் அடையாளம் காட்டுவேன்.''

இவ்வாறு சென்றல் காம்ப் நாலாம் கொலனியில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்தில் தாயையும் தந்தையையும் இழந்த மகன் குமாரசாமி ரவீந்திரன் (வயது 16) கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் நாலாம் கொலனி கொலைச் சம்பவங்கள் தொடர்பாக நடந்த மரணவிசாரணையில் சாட்சியமளிக்கையில் கூறினார். நீதிவான் அன்ரன் பாலசிங்கம் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது. அரசு தரப்பில் உகனை பொலிஸ் இன்ஸ்பெக்டர் யூ.எஸ்.நந்திதாஸ சாட்சியங்களை நெறிப்படுத்தினார்.

இன்ஸ்பெக்டர்: அன்று வந்தவர்கள் என்ன உடையில் வந்தார்கள்?

ரவீந்திரன்: கமால் ரக ரீ சேட்டும் நீல ரெளசரும் அணிந்திருந்தார்கள். கையில் துவக்கும் இருந்தது.

இன்ஸ்பெக்டர்; எல்லோரிடமும் துவக்கு இருந்ததா?

ரவீந்திரன்: ஆம்.

இன்ஸ்பெக்டர்: சுட்டவர்களைக் கண்டால் அடையாளம் காட்டுவீரா?

ஆம்.

அன்று கொல்லப்பட்ட வெள்ளைக்குட்டி சுந்தரலிங்கத்தின் மனைவி குணபாலசிங்கம் கௌரி (வயது 20) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

''அன்று நானும் எனது கணவரும் வீட்டிலிருந்தோம். கையில் துவக்குடன் ஜம்பர், ரீ சேட்டுடன் இருவர் எமது வீட்டிற்கு வந்தார்கள். எனது கணவனை இழுத்தார்கள்.

'ஒன்றும் செய்யாதீர்கள்' என்றேன், விடவில்லை. 'மாத்தயா எனது கணவனை ஒன்றும் செய்ய வேண்டாம்?' என்று கதறினேன்.

நீதிபதி குறுக்கிட்டு, ''வந்தவர்கள் யாரென்று தெரியாமல் ஏன் 'மாத்தயா' என்றீர்?'' என்றார்.

சாட்சி:- அவர்கள் சிங்களத்தில் கதைத்தபடியால் 'மாத்தயா' என்றேன்.

தொடர்ந்து கூறியதாவது:-

''அவர்கள் எனது கணவனைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனார்கள். பிறகு எனது வீட்டிற்கும் நெருப்பு வைத்தார்கள். பி.ப. 2 மணிக்குப் பிறகுதான் கணவர் சூடுபட்டு இறந்து கிடப்பதை அறிந்தேன். மறுநாள் பி.ப. 2 மணிக்கு கல்முனை ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்த்தேன். குடல் வெளியேறி எரிந்த நிலையில் கிடந்தார். அடையாளம் காட்டி சடலத்தைப் பெற்றுக்கொண்டேன்.''

கொலையுண்ட வேலுப்பிள்ளை பாக்கியராஜாவின் மனைவி இராமலிங்கம் யோகேஸ்வரி (வயது 27) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

''அன்ற எமது வீட்டில் நானும் எனது கணவர் பாக்கியராஜாவும் பிள்ளைகள் மூவரும் இருந்தோம். பி.ப. 3.00 மணியளவில் பரவலாக வெடிச்சத்தங்கள் கேட்டன. அயலவர்கள் எமது வீட்டிற்கு வந்து சேர்ந்தனர்.

அந்நேரம் பொலிஸ்காரர் சிலர் ஆயுதத்துடன் வந்து 'ஒக்கமே வெளியில் வா' என்று கத்தினர்.

ரீசேட், ரெளசருடன் அவர்கள் காணப்பட்டனர். எனது கணவரின் மார்பில் துவக்கை வைத்தார்கள். ஒன்றுமே செய்யவேண்டாமெனக் கெஞ்சினேன். கேட்கவில்லை. என் கண் முன்னே சுட்டார்கள்.

வாயாலும் மூக்காலும் இரத்தம் வந்த நிலையில் எனது கைகளிலேயே சாய்ந்து விழுந்தார். மடியில் கிடத்தினேன். உயிர்போய்விட்டது. வாய்விட்டுக் கத்தினேன். இன்னும் மூவர் வந்து எனது வீட்டிற்கு நெருப்பு வைத்தார்கள்.

ஒருவன் துப்பாக்கியை நீட்டி பற்களைக் கடித்துக்கொண்டு பயமுறுத்தினான். நான் பயந்தேன். சின்னக் குழந்தையையாவது காப்பாற்ற வேண்டும் என எண்ணி, கணவரை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு ஓடினேன்.''

செல்லையா இராமலிங்கம்

.. பி.ப. 2 1/2 மணியிருக்கும். துவக்குகளுடன் 50 பேர் கத்திக்கொண்டு வந்தனர்.

எமது வீட்டிற்கு வந்து 'ஒக்கமே எலியட்ட என்ர' என்று கத்தினார்கள். நாம் வெளியில் வர எனது மருமகனின் கையில் இருந்த பிள்ளையைப் பறித்து தூர வீசினான் ஒருவன். பின்பு மருமகனின் சேட் கொலரைப்பிடித்து இழுத்து வெருட்டினான். ஒருவன் எனது மருமகனது நெஞ்சில் துவக்கை வைத்துச் சுட்டான்.

வெடிவைத்தவரைக் கண்டால் அடையாளம் காட்டுவேன்.

கொலையுண்ட வெள்ளைக்குட்டி சுந்தரலிங்கத்தின் சகலன் நாகமுத்து அருட்பிரகாசம் (வயது 27), சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

''சம்பவதினம் வெடிச்சத்தம் கேட்டதும் எனது வீட்டில் சுமார் 45 பேர் கூடியிருந்தோம். 100-150 பேர் துவக்குடன் வந்தனர். வீடுகளுக்கு நெருப்பு வைத்தனர். நாம் வெளியே ஓடினோம்.

வந்தவர்கள் துவக்கை நீட்டி., 'வெளியில் ~~வா....' என்று சிங்களத்தில் கத்தினர். சின்னக்~~ கதவினூடாக அவதிப்பட்டு வெளியே வருகையில் சகலன் சுந்தரலிங்கத்தைப் பிடித்து இழுத்துச் சென்றனர்.

அவர்கள் சென்ற பாதையில் வெடிச்சத்தங்கள் கேட்டன. நாம் அதிரடிப்படையினர் நிற்கிற இடம் நோக்கி ஓடினோம். பின்பு அவர்களின் உதவியுடன் மீண்டும் வந்தபோது சகலன் எரிந்த நிலையில் இறந்துகிடந்தார்.''

கொலையுண்ட பொன்னையா சதாசிவத்தின் மனைவி காளிக்குட்டி தங்கப்பிள்ளை (வயது 55) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

''அன்று நானும் எனது கணவரும் இருந்தபோது இரைச்சலொன்று கேட்டது வந்தவர்கள் சத்தம் போட்டுக்கொண்டு வந்தார்கள்.

நீதிபதி: யாரென்று தெரியுமா?

சாட்சி: ஆம், பொலிஸ்காரர் மாதிரித் தெரிந்தது. சனம் ஓடியபோது நானும் அவரும் ஓடினோம். என் பின்னால் அவரும் ஓடிவந்தார் சிறிது தூரம் சென்றதும் அவரை நான் காணவில்லை.

பின்பு வந்து பார்த்தபோது கணவர் இறந்துகிடந்தார்.''

செல்லையா வெள்ளைக்குட்டி (54) சாட்சியமளிக்கையில்:-

''அன்று சுட்டுக்கொண்டு வந்தவர்கள் எனது தங்கை தங்கநாயகத்தையும் மச்சான் குமாரசாமியையும் சுட்டுக்கொன்றார்கள். சுட்டவனைக் கண்டால் அடையாளம் காட்டுவேன்'' என்றார்.

www.tamilarangam.net

## சர்வதேசதமிழர் கவியரங்கு:

**கதறலுக்கு வழியே காணேன்!**

தமிழனென்ற வித்துலைந்து
தலைதளர்ந்து குணமிழந்து
தரணியெங்கும் ஊழ்சுழியில்
பரவுகின்ற பான்மை கண்டேன்

இறைகறந்து தலைநிமிர்த்தி
இமயம்வரை கொடிபொறித்து-அவ்
வியலுமையைப் போக்கி இன்று
இரந்துநிற்கும் காட்சி கண்டேன்

எரிகின்ற வீட்டிலும் தான்
எண்ணெய் ஊற்ற எத்தனைபேர்
எம்மவரில் இருக்கின்றார்கள்
என்பதையும் கண்டுகொண்டேன்.

முடிவெடுக்கும் சத்திருந்தும்
குடிகெடுக்கும் கூட்டம்கண்டேன்
கறைபடிந்த எம்மினத்தின்
கதறலுக்கு வழியே காணேன்.
**ஆரையம்பதி க.சபாரத்தினம்**

**கடவுளிடம் கேட்டேன்!**

கண்டேன் கடவுளை கானகத்தில்
கேட்டேன் எனது கேள்விகளை.
மறத்தமிழன் தாக்கப்படும்
காரணமென்ன?
முற்காலத்தில் தறிகெட்டு
வாழ்ந்ததாகும்!
பொய்!என அலறினேன்,
தமிழன் தறிகெட்டதில்லை! என்றேன்
மெய்!என்று சிரித்தார்.
தமிழன் தறிகெட்டு மதிகெட்டு
வாழ்ந்ததுண்டு!
உதாரணம் என்னவோ?
கூறும் பார்ப்போம்! என்றேன்
உற்றாரை உதைத்தகாரணத்தால்
வேற்றோன் காலில் விழுந்து
யாசிக்கிறான்!
பேச்சினால் மயக்கினான் மக்களை
இன்று பேய்களால் அடக்கப்பட்டு
வாழ்கிறான்!
உணர்ந்து மனம்திருந்தி தமிழனை
விடுவிக்க வழியது கேட்டேன்
ஒன்றுசேருங்கள்! ஒற்றுமைவெல்லும்
எனக்கூறியே மறைந்தார்!
**ஜானகி ராஜசுந்தரம்,**
**றெட்கில், இங்கிலாந்து**

**ஒரு அகதியின் கதை!**

ஊர்கோலமாய் விண்ணிலே மேகங்கள்
யார் தந்தது கண்ணிலே சோகங்கள்?
விடியாத இரவாச்சுதே என்வாழ்வு
விதியாலே படகாச்சுதே என்பயணம்
விழிநீரும் கடலாச்சுதே-ஒரு
வழிதெரியா கதையாச்சுதே
துடுப்பில்லாப் படகானேன் ஒரு
வழிதெரியா முடமானேன்!

என்வேதனையை கொண்டு செல்லு
அதை,என்நண்பனை கண்டுசொல்லு!
**கொழும்பு கொச்சிக்கடை-**
**ரூபியல் சுகுமார்-மாஸ்கோ**

**அழுது கொட்டடா!**

வால்இல்லா நாயோடு,
புதுமை வந்தாச்சு
புறஊதா கதிர் எதிர்க்கும்
குடையும் வந்தாச்சு
ஆசுவாச சுவாசம் செய்ய
பிராண வாயு வந்தாச்சு!
கூசாமல் குறுகாமல்
இயற்கை அன்னையை
ஒவ்வொன்றாய் பட்டியலிட்டு
வெட்டிப் போட்டாச்சு!
எங்கும்நாற்றம் எடுக்கவைத்து
நாறடிச்சாச்சு!
அதன்பலனை இயற்கை தர
துவங்கி யாச்சுது!
அது தாங்கமுடியாமல்
மன்றம் போட்டாச்சு
நான் நிரபராதி என்று எல்லா
அரசும் சொன்னாச்சு!
அதை அனைத்துலக
மக்களெல்லாம் நிராகரிச்சாச்சு
எமைக்காக்கும் இறைவனும்
தான் கைவிரிச்சாச்சு!
இனி என்ன வாழ்க்கையென
அழுது கொட்டடா?
**ச.வெள்ளிங்கிரி**
**பாலக்காடு,கேரளா**

**எது தீபாவளி?**

ஈழத்தமிழரைப் பட்டாசாக்கி
இந்தியாவை நெருப்பாக்கி
அதைப்பிடித்துக் கொளுத்தினான்
சிங்களவன்!
பட்! பட்டென வெடித்த
பட்டாசுக்குப்பை போல்
வெடித்துச்சிதறினான் தமிழன்
அன்றொரு அசுரன் இறந்தான்
அது தீபா பலி யானது!
இன்று தீபாவளியில்
அப்பாவிதமிழன் இறக்கின்றான்
அது தமிழ்ப்பலியானது
தமிழனிறக்கும் சோகதினத்தை
சுகநாளாய் கொண்டாடியே
இனிப்புண்ணும் சோகம்வேண்டாம்!
எம்மனப்புண் என்றாறுமோ?
**கவிஞர் சொல்லரசு-சேலம்**

**பெண்ணே,தன்னம்பிக்கைகொள்**

நாள்தோறும் அடியாம்
நேற்றுக்கூட மார்பினில்
சிகரெட்டால் சுட்டு
ஓசையின்றி அழுதாளாம்.
தோழி சொன்னாள் இப்படி
தோற்றவள் போல்
தோன்றினாளாம்!

அலுவலகங்களில் பேரூந்துகளில்
பெண்ணைச் சீண்டல்
தனிமையை தனித்துவத்தை
பறித்தெடுத்தல்
வெளியில் சொல்லமாட்டாமல்
ஆண்டாண்டு காலமாய் மனதினுள்
மௌனமாய் அமுங்கிப்போகாதே!
தட்டிக்கேட்டு தன்னம்பிக்கை வளர்!
உலகம் பெண்களால் தான்
இயங்குகிறது! இதை நம்பு!
**புதுச்சேரி ச.வேல்முருகன்**

**ஓ ! தொலைக்காட்சியே !**

ஒளியை மின்காந்த அலையாக்கி
மின்காந்தஅலையை மீளஒளியாக்கி
களிப்பையூட்டும் கருவியன்றோ!
கனக்கப்படித்தால் உனைப்புரியும்.
எத்தனை விடயம் அறிந்திடலாம்,
எத்தனை உலகம் கண்டிடலாம்!
நேரத்தை நிறுத்துதல் தான் கடினம்
ஒரேநேரத்தில் உலகச்சம்பவங்கள்
உன்வீட்டிலிருந்தே பார்த்திடலாம்!
மழையோ,வெய்யிலோ என்றாலும்
எல்லா உலக நிகழ்ச்சியையும்
கஷ்டமில்லாமல் பார்த்திடலாம்!
**அளவையூர் ஜெகா - ஒஸ்லோ**

**குட்டிக்கவிதைகள்!**

ஒரேமொழி,ஒரே இனம்
ஒரே நாடு.....
நிலவில் மனிதர்!

சோம்பலின் தீமைகள்
நூலெழுத ஆசை....
ஆனால் சோம்பல்!

எதைத் தொலைத்துவிட்டு
சுற்றி சுற்றி தேடுகிறது....
கலங்கரை விளக்கம்!

இன்னும் எத்தனைநாள்
இப்படியே ஏமாறும்......
தூண்டில்மீன்கள்!

விபத்து!
திரும்பிப்பார்க்கையில்...
மீள விபத்து!

நரி,கரடியை
கூண்டுக்குள் வைத்தோம்......
நம்மனதில் அதன்குணம்!

வகைவகையாய்
வாழட்டும் அனுகுண்டு.....
நூலில் மட்டும்!

நன்றி சொல்கிறது
பழுத்தஇலை.......
தாய்மரத்துக்கு எரு!
**மா.தமிழ்ப்பரிதி-சின்னசேலம்**

டென்மார்க்:ச.யோகேந்திரம்;வ.க.பரமநாதன்; பிரான்ஸ்: பற்குணராசா,த.தர்மசீலன்1.43759171; இ.கிருபானந்தன், இ.கந்தசாமி
இலங்கை: கொழும்பு: வி.கங்கைவேணியன்41.684549 விதுரன்; கைதையூரான் குமரகுருபரன் ;சுகந்தி தில்லையம்பலம்
யாழ்ப்பாணம்:பி.ஹம்சானந்தி; மட்டக்களப்பு: க.சபாரத்தினம்; களுவாஞ்சிக்குடி: வி.காந்தகுமார்மாத்தளை: தவ.சஜிதரன்

www.tamilarangam.net

## கைதிகள் நாம்

கைதிகள் நாம்
அரசியல் கைதிகள் நாம்
நீதியிலா ஆட்சியின்
நிரந்தரக் கைதிகள் நாம்
பாதியிலே வந்து செல்வோரும்
நிரந்தர மாயிருந்தே
வாதிட்டே வழக்கிடுவோருமான
கைதிகள் நாம்
ஆண்ட பரம்பரையான
தமிழர் நாம்
ஆண்டிகள் போல்
கைதிகளாயிருப்பது
ஆண்டிடும் அரசால்
மட்டுமல்ல
கூடிப் பிறந்தே
குழிபறிக்கும்
துரோகிகளாலும்தான்!

-வே.தவயோகநாதன்,
களுத்துறை.

வீரகேசரி POST BOX 160;
எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
185 கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு

'இன்டர்நெட்டில்'
வீரகேசரி
'இன்டநேட்': http://www.ccom.lk/ virakesari
'ஈ மெயில்': virakesari @ lanka.ccom.lk
PHONE : 320881 (3 LINES), FAX : 448205

BBC WORLD SERVICE

BBC World Service broadcasts in English and 41 other languages. For further information contact:
Publicity Manager, News & Current Affairs, BBC World Service,
220 NW, Bush House, Strand, London WC2B 4PH, UK.
Tel: +44 171 257 2217 Fax: +44 171 379 3933

EUROPE, FORMER SOVIET UNION & MIDDLE EAST
Europe/Former Soviet Union: 15070, 12095, 9410, 6195, 6180 kHz, 648 MW (North West Europe only)
Middle East: 15575, 15070, 12095, 11760, 9410, 1413 kHz 1323 MW

AFRICA
Botswana, Lesotho, Malawi, Mozambique, South Africa, Swaziland, Zambia, Zimbabwe: 21660, 21470, 17885, 15400, 11940, 9630, 9600, 6005, 3255 kHz 1197MW
Lesotho: 90.2 FM

SOUTH ASIA
Bangladesh, India, Pakistan, Sri Lanka: 9510, 5975, 11750 kHz
Bangladesh (Dhaka): BBC FM 100 Mhz

## அங்கும் இங்கும்:

## கேசரி பார்வையில்

டிச.2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 1997

## இழுத்தடிப்பு வேண்டாம்

நாட்டின் இன நெருக்கடியின் பின்னணியில் சந்தேகத்தின்பேரில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் அரசியல் கைதிகளாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் குடும்பத் தலைவர்கள், மாணவர்கள், தொழில் புரிவோர் எனப் பலதரப் பட்டவர்கள் அடங்குவர்.

விசாரணைகள் இன்றியே இவர்களுள் பலர் வருடக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இது சம்பந்தமாக நீதி அமைச்சின் கவனத்துக்குப் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் துரித விசாரணைக்கான நடவடிக்கை எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. வெறுமனே போலியான வாக்குறுதிகளே வழங்கப்படுகின்றன எனக்கூறி தமிழ் கைதிகளின் பெற்றோர் கண்ணீர் வடிக்கின்றனர்.

இந்தப் பின்னணியில் 'விசாரணை செய் அல்லது விடுதலை செய்' என்ற கோரிக்கையை முன்வைத்து புதிய மகசீன் சிறைச்சாலையில் கடந்த வியாழக்கிழமை தமிழ் கைதிகள் 223 பேர் சாகும் வரை உண்ணாவிரதத்தில் குதித்தனர். எனினும் திடீரென கடந்த சனிக்கிழமை இவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக நான்கு பஸ் வண்டிகளில் ஏற்றப் பட்டு களுத்துறை சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

களுத்துறைக்கு மாற்றப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை தமிழ் எம்.பி.க்கள் சிலர் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளனர். அங்கு பயிற்சி சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சிலர் கம்பிகள், தடிகளால் தம்மை தாக்கி, உடைகளைக் கிழித்ததாகவும் புத்தகங்கள் அனைத்தும் நாசமாக்கப்பட்டதுடன் பலவந்தமாக வாய்க்குள் பாண் திணிக்கப்பட்டதாகவும் அதையடுத்தே தமது உண்ணாவிரதத்தை தாங்கள் கைவிட்டதாகவும் கைதிகள் எம்.பி.க்களிடம் தெரிவித்துள்ளனர்.

பயிற்சி சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இப்போதே இந்த விதமாக மிருகத்தனமாக நடக்கத் தொடங்கினால் பயிற்சி முடிந்தபின்னர் அவர்களின் நடவடிக்கை எவ்வாறு அமையும் என்பதை கற்பனை செய்துபார்ப்பதே கடினமாகும்.

ஏலவே 1983ஆம் ஆண்டு ஜூலை ஆடிக்கலவரத்தில் சிறைச்சாலைக்குள்ளேயே 52 அரசியல் கைதிகள் கொலை செய்யப்பட்ட வரலாறும் கறைபடிந்த அத்தியாயமாகவேயுள்ளது.

உலகறிந்த இந்தப்படுகொலை தொடர்பாக எதுவித விசாரணையுமோ, பாதிக்கப்பட்டவர்கள் சார்பான நிவாரணமோ எதுவுமோ இல்லாமல் வெறுமனே 'கலவரம்' என்ற பெயரில் அது கைவிடப்பட்ட விடயமாகிவிட்டது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது சம்பந்தமாக சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளன. எனினும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதுபோல அவ்வப்போது காட்டிக்கொள்ளப்படுகின்றன என்பதே யதார்த்தம்.

குறிப்பாக பொலிஸ் நிலையங்கள், சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்படும் தமிழ் கைதிகளின் அடிப்படை மனித உரிமைகள் மோதி மிதிக்கப்படுகின்றன என்பதற்கு அப்பால் அவர்கள் முழுக்க முழுக்க குற்றவாளிகளாகவே நோக்கப்படுகின்றனர் என்ற உண்மையையும் சம்பந்தப்பட்டவர்கள் உணர முன்வரவேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகள் எதிர்நோக்கும் கஷ்டங்கள், நெருக்கடிகளைக்கூட வெளி உலகிற்கு கொண்டுவருவது கடினமான காரியமாகிவிட்டது. கடந்த சனியன்று கைதிகள் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச்சென்ற தமிழ் பத்திரிகையாளர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன் படச்சுருளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் இந்த நாட்டின் தமிழ் அரசியல் கைதிகள் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என்பதற்கு இது நல்ல உதாரணமாகும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் பலர் குடும்பஸ்தர்களாகவும் பிரதான உழைப்பாளிகளாகவும்கூட இருந்துவருகின்றனர். எனவே அவர்கள் மாத்திரமன்றி அவர்களை நம்பிவாழும் ஏனையோரும் கண்ணீர் வடிக்கவேண்டிய அவலநிலை இன்று தோன்றியுள்ளது. மனித உணர்வுகளை மலினப்படுத்தும்வகையில் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் இழுத்தடிப்புக்கள் இனிமேலும் தொடரக்கூடாது.

'தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதிக்குச் சமமாகும்' என்பதை மறந்து போகக்கூடாது. இலங்கையின் நீதித்துறை மௌனித்துவிடவில்லை என்பதைக் காட்டும்வகையில் மேற்படி அரசியல் கைதிகள் எதிர்நோக்கும் நெருக்கடிக்கு சரியான நீதியை நிலை நிறுத்துவது நீதித்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் கரங்களிலேயே தங்கியுள்ளது என்பதை நிதானமாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

## தமிழ் ஈழப் போர்ப் பரணி



உணர்ச்சிக் கவிஞர்
சிங்காரவேலன்
உணர்ச்சிக் கவிஞர் பதிப்பகம்
2, காவேரி சாலை
அதவதானம், திருச்சி-2.
தமிழ் நாடு
விலை : ரூ. 10-00



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முடங்கள்

## 2. மனநீதி

காரையூரான் இ.தியாகலிங்கம், ஒஸ்லோ.

அன்று காலையில் வினியை அவளுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட விசேட வகுப்பில் விட்டுவிட்டு , வீட்டிற்கு வந்து சமையல் வேலைகளில் ஈடுபட்டேன். என் வாழ்க்கை , இப்போது நகரசபை செய்யும் உதவியிலேயே ஓடிக் கொண்டு இருந்தது. வினிக்கு உதவி செய்ய நான் எப்போதும் தேவைப்பட்டதால் நான் வேலைக்குச் செல்வதில்லை. எனக்கும் எனது பிள்ளைக்கும் செலவுக்கு போதிய பணம் கிடைக்கிறது. சிலபேர் இந்தத் தொகையை கூறினால் இது என்ன மூக்குப்பொடி' என்பார்கள். மனம் போலத்தான் வாழ்க்கை. போதும் என்றால் போதும். போதாது என்றால் இந்த உலகில் உள்ளதை எல்லாம் கொண்டு வந்தாலும் போதாதுதான். இப்போது சமைத்து வைத்தால் வினி வந்தவுடனேயே சாப்பாடு பரிமாறலாம். அவளை மீண்டும் போய்க் கூட்டி வரவேண்டியதும் எனது கடமைதான். அதற்கு இன்னும் அதிக நேரம் இருக்கிறது.

வாழ்க்கை ஓடிக் கொண்டு இருக்கிறது. சக்கரம்போல யாருக்கும் கட்டுப்படாது , இடையறாது ஓடிக்கொண்டு இருக்கிறது. புற அமைதி இருந்தாலும் மன அமைதியற்ற வாழ்க்கைதான் இது. அந்த அமைதி அவரோடேயே போய் விட்டது.

ஊரில் இருந்தபோதும் செல்வத்திற்கு குறையிருக்கவில்லை. ஆனால் போரின் பயத்திற்கு யாரும் தப்ப முடியாத நிலையில் தத்தளிக்க வேண்டி இருந்தது. எங்கள் வாழ்க்கை இன்பமாய் இருந்தாலும் எப்போது யார் வீட்டில் செல்விழுமோ என்கின்ற ஏக்கம் எல்லோரையும் ஆட்டிப் படைத்தது. அது நிசமாகக்கூடாது என்பதே எல்லோரது பிரார்த்தனையாகவும் இருந்தது.

ஆதிகாலத்தில் இருந்த போர்முறை நீதியானது. போர் வீரர்கள் நேருக்கு நேரே போரிட்டுக் கொண்டார்கள். அங்கே பொதுமக்களுக்கு அழிவு ஏற்படவில்லை. போர் முடிந்தபின்பு வென்றவன் வேண்டும் மென்று வதைத்தாலொழிய அப்பாவி மக்களுக்கு ஆபத்து இருக்கவில்லை. இந்த நவீன யுகத்திலே மனிதநேயமற்ற மனிதருக்குள்ளே போர் என்று வந்துவிட்டால் போரிடுபவர்கள் அழிவதை விட அப்பாவிகளே அழிந்து போகிறார்கள். அதையே அவர்களும் விரும்புகிறார்கள்.

எதுஎதுவால் யார்யார் அழிகிறார்கள் என்பது புரிந்தாலும் யாரும் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. இந்த யுகத்தில் மனிதர்கள் எல்லாம் மனச்சாட்சியை , பாம்பு செட்டையைக் கழட்டி வீசுவதுபோல , வீசி எறிந்து விட்டார்கள். எந்த விடயத்திலும் நீதியும் இருப்பதில்லை. முறையும் இருப்பதில்லை. அரசுக்கு நன்கு தெரியும். செல் அடித்தால் சாவது பொதுமக்கள்தான் என்பது புரியும். புரிந்தாலும் அடிக்கிறார்கள். எப்போது யார் வீட்டில் விழும் என்பது யாருக்கும் தெரியாத புதிர். அந்த அவஸ்தை வாழ்க்கையையே மரணதண்டனை போன்றதாக்கியது. இன்றும் தூக்கில் போடலாம். நாளையும் தூக்கில் போடலாம் . என்று போடுவார்கள் என்பதுதான் எவருக்கும் தெரியாத புதிராகிய வாழ்கையது.

ஒருகாலத்தில் இறப்பு என்பது அருமையாக நடந்த ஒன்று. இன்று மனித பிணங்கள் சந்திக்குச் சந்தியாய் நாய்போல கிடக்கிறது. சற்று முன்பு செல்விழுந்து ஒருவர் செத்தாலும் , அடுத்தநிமிடம் மனிதகூட்டம் வழமைபோல இயங்க வேண்டித்தான் இருக்கிறது. எல்லோர் மனதும் மரத்துவிட்டது. எமது வாழ்க்கை இப்படித்தான் என்றாகிவிட்டது. சா எப்போது வரும் என்பதும் எவருக்கும் தெரியாது. தெரிந்திருந்தால்

மனிதகுலம் சிலவேளை திருந்தி நடந்திருக்கலாம். செத்தவருக்காய் இந்த உலகும் ஸ்தம்பித்துப் போய் விடுவதில்லை என்பதை செத்த அடுத்த நிமிடத்தில் இருந்து கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் எமக்கு. கவலைப்பட நேரமில்லை எங்களுக்கு. கவலைப்பட்டுக்கொண்டு இருந்தால் கனஉயிர்கள் காணாமல் போய்விடும் அபாயம் அங்கே. யார் செத்தாலும் என்ன நடந்தாலும் உலகமும் அதன் இயக்கமும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. எவருக்காகவும் எதுவும் நின்று விடுவதில்லை.

பதவியில் இருப்பவருக்கு எவரின் இறப்பும் எந்தத்தாக்கத்தையும் உண்டுபண்ணியதில்லை. நித்தம் நித்தம் பல்லாயிரம் மனிதர்கள் செத்துக் கொண்டுதான் இருந்தார்கள். பக்கத்தி வீடுகளில் சாக்கள் நிகழ்ந்த போதும் என் விசு பயந்துவிடவில்லை. எல்லோரும் வெளி நாடுபோகிறார்களே நாங்களும் போய் விடுவோமா? என்று கேட்டிருக்கிறேன். மானமற்று மற்ற நாட்டுப் பிச்சையில் வாழ்வதிலும் இங்கு கௌரவமாய் வாழ்ந்து காலம் வரும்போது மடிந்து போவோம் என அவர் மறுத்துவிட்டார். மன்றாடியும் பலன்

ா

இருக்கவில்லை. குடும்பம் காரணமாகப் போராடாவிட்டாலும் , யுத்தம் காரணமாக நாட்டைவிட்டோடும் கோழை இல்லைத் தான் என்றார்.

எங்கள் நாட்டிற்கு இப்படியொரு வலதுசாரி இனவெறி பிடித்த அரசு வாய்த்திருக்கக்கூடாது. ஐக்கிய தேசியக்கட்சி தமிழரின் சுதந்திரத்தைத் துளியும் விடாது பறித்தது. மனிதர்கள் என்கின்ற கணிப்பே அவர்களுக்கு தமிழர்மீது இருக்கவில்லை. பிடிபடுபவர்கள் உயிரோடு திரும்பி வருவதில்லை. விசாரணை இருப்பதில்லை. பாதுகாப்புப் படையே நீதியையும் பரிபாலித்தது. அங்கு அவர்கள் இட்டதுதான் சட்டம். இலங்கை , மக்கள் ஜனநாயகக்குடியரசு என்னும் பெயர் நகைப்பிற்குரியதாகும். அங்கே ஜனநாயகம் நாட்டைவிட்டு தப்பியோடி கால் நூற்றாண்டாகிவிட்டது. அராஜகம். எங்கும் அராஜகம். எதிலும் அராஜகம். போராளிகளை அழிப்பதாய் கூறிக் கொண்டு தமிழினத்தை அழித்தார்கள். தமிழரின் சொத்தை அழித்தார்கள். சொந்த மதமான புத்தமதம் போதித்த அத்தனை நல்லவற்றையும் மறந்தார்கள். கேட்டால் இது பௌத்த நாடு என்றார்கள். பௌத்த நாடு என்றவருக்கே பௌத்தத்தின் உண்மை விளங்கவில்லை. அகிம்சா கொள்கை விளங்கவில்லை. புத்தர் என்ன கூறினார் என்பது விளங்கவில்லை. பதவியைத் தப்ப வைத்துக் கொள்வதற்காய் இனவெறி நாடகத்தை நடத்தினார்கள். பௌத்த நாடு பௌத்த நாடு என்று கூறிய வண்ணமே புத்தரது கொள்கைகளை குழி தோண்டிப் புதைத்தார்கள். நீதி என்றால் என்ன ? ஜனநாயகம் என்றால் என்னவென்பது மக்களிடையே கேள்வியாகியது. மக்களுக்கு இச்சொற்களின் பொருள் தெரியவில்லை. கொல்லாமை போதித்தது பௌத்தமதம். தமிழரை கொன்று குவிப்பதற்கும் தங்கள் இனத்தின் இன்னோரு பகுதியை கொன்று குவிப்பதற்கும் அரசே சட்டத்தை மீறிய கள்ளப் படையொன்று அமைத்தது. புத்தர் இருந்திருந்தால் இரத்தக் கண்ணீர் வடித்திருப்பார். அந்தக் கண்ணீர் இந்த சமுத்திரத்தையே குருதிக் கடலாக்கி இருக்கும். புத்தர் இல்லை. புல்லுருவிகள் புத்தரின் பெயரையும் சிங்கள மொழியையும் கூறியே தமிழரைக் கொன்று குவித்தார்கள்.



திருகோணமலை:மதுமாரி தாமரைத்தீவான்கண்டி: எஸ் .மயில்வேந்த ன்; இரா.கனகரத்தினம் அட்டன்:பா.சங்குப்பிள்ளை;
குவைத்:முகமதுகவுஸ்; வி.எம்.லிங்கன்; கவிற்சலாந்த்:ம.மனோகரன்அமெரிக்கா: செ.பாஸ்கரன்; அவுஸ்திரேலியா: பவளம்.பத்மா
ஞானப்பிரகாசம்தென்கொரியா:ஏ.யு.எல்.ஏ.ஹில்மி பிஜி:ச.சச்சிதானந்தம் தென்ஆபிரிக்கா:செல்வன்பிள்ளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தன்னைத்தானே திருத்திக் கொண்டால் உலகம் தானாக திருந்தும். மற்றவனில் குறைகாணமுதல் எங்கள் குறைகளையும் , குீறுரங்களையும் திருத்திக் கொள்ள வேண்டும். எனக்கும் விசுவுக்கும் கருத்து முரண்பாடு இதில் எழுவதுண்டு. கருத்துமுரண்பாடு எப்போதும் கருத்திற்கு எதிராக இருந்ததே தவிர எனக்கும் அவருக்கும் இடையில் இருந்ததில்லை. இந்தப் புரிந்துணர்வு இங்கே பலரிடம் காணாது இருக்கும் போது நான் வாயைமூடி மௌன யாகம் செய்ய வேண்டிய கட்டாயம்.

கொழும்பு சென்று கொழும்பிலும் இருக்க முடியாது. யாழ்ப்பாணத்திலும் இருக்க முடியாது. எப்போது எங்கே செல் விழும் என்பதை எவரும் கணித்துவிட முடியாது. கொழும்பிலே விடுதிகளில் நின்றால் எப்போது வந்து எங்கே அள்ளிக் கொண்டு போவார்கள் என்பதையும் எவரும் கணித்துவிட முடியாது. அதில் எத்தனைபேர் உயிரோடு திரும்பி வருவார்கள் என்பதும் கேள்விக்குறியான ஒன்றே.

நாங்கள் சந்தோசமாய்த்தான் வாழ்ந்தோம். உள்வீட்டிற்குள் நாங்கள் பரம சந்தோசமாய் வாழ்ந்தோம். அப்போது எனது முதலாவது குழந்தை, வினி உண்டாகி இருந்தாள். யுத்தம் எல்லாவற்றையும் சீர் குலைத்திருந்தது. மனிதன் மனிதனாய் வாழ்வதற்கான அடிப்படைத் தேவைகளையே உருக்குலைத்திருந்தது. உண்டாகி இருந்த போதும் ஒழுங்கான வைத்தியம் பார்க்க முடியாதநிலை. ஆனால் விசு சற்றும் கலங்கிவிடவில்லை. என்ன நடந்தாலும் எமது பூமியிலேயோ என்று இருந்தார்.

வினி என்வயிற்றில் எட்டாவது மாதத்தை எட்டிக் கொண்டிருந்தாள். அன்று காலை நித்திரையால் எழுந்தவருக்கு மனதில் ஏதாவது பயம் தோன்றி இருக்க வேண்டும். எழுந்திருந்து என்னையே வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தார். நான் அரைவிழிப்பில் இருந்தேன். எனது மனதில் ஏன் இவர் இப்படிப் பார்க்கிறார் என்கின்ற எண்ணம் எழ,

என்ன விசு. ஏன் அப்பிடிப் பாக்கிறியள்? ஏதோமாதிரி இருக்கிறியள். ?
ஒண்டுமில்ல செவ்வந்தி. நான் உன்னில நிறைய அன்பு வைச்சிருக்கிறன்.
ச்...இது யாருக்கு தெரியாது. இத யார் இல்லையெண்டது.
எனக்கு உன்னோடயே நெடுக இருக்கோணும் போல இருக்கு செவ்வந்தி.
என்ர விசுவுக்கு இப்ப என்ன புதிசா ஆசை.
ஏதோ உன்னையே கட்டிப் பிடிச்சுக் கொண்டே இருக்கோணும் போல இருக்குது.
இருங்களன் , எங்கள யார் தடுக்க முடியும்.

விசு என்னை அண்டி வந்தார். தன்னோடு இறுக்கிக் கொண்டார். அது அலாதியான சுகம்தான். அவர் ஆசைப்பட்டு அணைப்பது அலாதியான சுகம்தான். அதைத்தான் நான் சொர்க்கம் என்று எண்ணி இருந்தேன். இப்போதும் எனக்கு அதுதான் சொர்கம். மற்றவர்கள் சொல்லும் கற்பனைச் சொற்கத்தில் எல்லாம் நம்பிக்கை கிடையாது. உண்மையாய் நான் அனுபவித்த சொற்கம் என் விசுவின் அணைப்புத்தான். அவரின் இறுக்கம்தான். அவரின் நுகர்ச்சிதான். நான் அவரில் இருந்து நுகரும் வாசம்தான்.

செவ்வந்தி.
ம்.
எனக்கு ஏதோ இரண்டுமூண்டு நாளா பயமா இருக்கு செவ்வந்தி.
காமோன் யா. எதுக்குப் பயப்பிடோணும்.
எங்களுக்கு ஏதாவது நடந்திட்டா. இந்த வயித்துக்க இருக்கிற குட்டி பாவம் எல்லே.
சோ.
உன் விருப்பப்படியே எங்கயாவது போயிடுவமா?
வாவ். போவமே. எங்கயெண்டாலும் போய் நின்மதியா வாழுவமே.
நான் கொழும்புக்குப் போற அலுவல முதல்ல பாப்பம் எண்டு நினைக்கிறன்.
அதைச் செய்யுங்கோ முதல்ல.
அங்க போய் எங்க நிக்கிறது. லொச்சில எண்டா ஆபத்து.
காமாச்சி மாமிவீடு பெரிய வீடுதானே. கொழும்புக்கு வந்தா தங்கட வீட்டில வந்து நிக்கோணும் எண்டு போன முறை வந்திட்டுப் போகேக்கையும் சொன்னவா. பயப்பிடாம நாங்க போக வேண்டியதுதான்.
ஆர்றையும் வீடுவழிய போய் நிக்க வேண்டி இருக்கு.
ச் இதெல்லாம் பாத்தா சரிவருமே?
நான் அப்ப இண்டைக்கு வேலைக்குப் போகேல்ல கொழும்பு போற அலுவல் பாக்கப் போறன்.
நான் ரீவைக்கிறன்.
வேண்டாம் . நீ கஸ்ரப் படாத . நானே வைச்சுக் குடிச்சிட்டுப் போறன். கூறியவண்ணம் அவர் எழுந்து சென்றார்.
இதில என்ன கஸ்ரம் நான் வாறன்.
ம்...நான் சொன்னா விடப்போறியே சரி வா.

அன்று தேனீர் குடித்துவிட்டு போகும்போதும் இறுக்கி அணைத்துவிட்டுப் போனார். போனவர் போனவர்தான். வரும்போது பிணமாகத் தூக்கி வந்தார்கள். ஏன் விசுவைப் பிணமாகத் தூக்கி வந்தார்கள். அதைஎண்ணும் போது என்னால் கண்ணீரைக் கட்டுப் படுத்த முடியவில்லை. இப்போதும் என்னால் முடியவில்லை. வாய்விட்டு அழுகிறேன். அழலாம் . அந்தச் சுதந்திரம் இங்கே இருக்கிறது. எனது விசு இப்படிப் போன இடத்தில் செல்விழுந்து போய்விடுவார் என நான் கனவுகூடக் கண்டிருக்கவில்லை. அது நிஜமானபோது நிலை குலைந்துபோய்விட்டேன். இனி என்னால் வாழ முடியுமா எனக் கலங்கிப் போய் விட்டேன். விசுவிடம் கிடைத்த அன்பும் அரவணைப்பு இனி எனக்குக் கிடைக்குமா? நான் தவித்துப் போய்விட்டேன். அந்த அன்பும் அரவணைப்பும் அவரோடு போய்விட்டது.

யாரது சாவாலும் இந்த உலகம் இயங்காது நின்று விடுவதில்லை. துன்பத்தில் வாடிய எனக்கு விவேகானந்தரின் ஒரு அறிவுரை உலகிற்கு கொண்டு வந்தது. பலனை எதிர்பாராது , உன்னால் எதுவும் நடப்பதில்லையென எண்ணிக் கொண்டு நீ செய்ய வேண்டியதைச் செய்யென்பது சரியாய் பட்டது. விசுவின் சாவால் நான் நிலைகுலைந்தாலும் இந்த உலகம் நிலை குலைந்துவிடவில்லை. வயிற்றுக்குள் இருந்த சிசு வளராமல் விடவில்லை. எல்லாம் இயங்குவது போலவே இயங்கிக் கொண்டு இருந்தது. எனது மனம்தான் அவரில்லாது துடித்தது. அவரின் இழப்பால் பெரிதும் பாதிப்புற்றது. மற்றவை எல்லாம் வழமைபோலவே இயங்கியது. யாரது சாவும் இந்த உலகை நிரந்தரமாக பாதிப்பதில்லை. சாவை அதிகம் கண்டு கொண்டிருந்த எம்மூராரிற்கு இது பொருட்டாகவே இல்லை.

நான் துக்கத்தால் வாடினாலும் எனது கருவின் வளர்ச்சியை என்னால் துண்டித்து விடமுடியவில்லை. மனது விசுவை இழந்த வேதனையில் இருந்து விடுபடமுடியாவிட்டாலும் , எனது சிசு என்னிடம் இருந்து விடுபடும் யாதார்த்தத்தை என்னால் உதாசீனம் செய்ய முடியவில்லை. என்கடமையை நான் செய்ய வேண்டும். இதுதான் நான் விசுவுக்கு செலுத்துகிற உண்மையான அன்பாய் இருக்கும். நான் ... (வளரும்



ரஷ்யா/மாஸ்கோ: முருகேசம்பிள்ளை ஆர்.சுகுமார் சவுதிஅராபியா/ அல்.கதிவ்: அ.நிக்சன் றியாட்: பி.யோகநாதன்
ஜித்தா:எஸ்.காளிதாஸ் துபாய்: நஜீர் முகமது.ஏ. பாஹ்ரெயின்:அப்துல்கனி; எம்.ஐ.ரபீக் ஓமான்:எஸ்.கண்ணன்.கணேசலிங்கம்
சுவீடன்:எம்.என்.பாலாஸ்; வ.சத்தியவான்; ஜேர்மனி:க.செந்தில்; க.புவனேந்திரன்: 0230474391; நெதர்லாந்த்: ஈசன் அருள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொற்ஸ்வானா:கமலா.வேலுப்பிள்ளை புருணை: கிருஷ்ணராஜா யப்பான்:டாக்டர்.சச்சி ஸ்ரீகாந்தா சிங்கப்பூர்:கிருஷ்ணன் மலேசியா:க.மாணிக்கவாசகர்,க.கணேசன் அருண் பேராசிரியர்.இர.ந.வீரப்பன் இந்தோனேசியா: மெடான்:நாகலிங்கம்; மு.சந்திர சேகரன்: .யகார்த்தா:திருமதி.மணி தாய்லாந்து:பாங்கொக்:வே.நாகராஜா புக்கற்:மெ.வேலு;நா.சங்கரன் பர்மா:அப்துல் ரசாக்

# பரம்பரைஅலகு-நவீனமயப்படுத்தப்பட்ட உணவு வகைகட்கு குறியிடவேண்டிய தேவை

**பரம்பரைஅலகு-நவீனமயப்படுத்தப்பட்ட உணவுவகைகட்கு குறியிட வேண்டியதேவை,4 ஐப்பசி 1997 முதல் செல்லுபடியாகும்.**


**குறியிடவேண்டியதேவை குறித்த சுற்றுநிருபத்தை அரச உணவுத்தரக்கட்டுப்பாட்டு அதிகாரசபையின் அச்சகவிடய அலுவலகத்தில் பெறலாம்:**
**தொலைபேசி:22 24 67 22 (12.00-15.00 நேரப்பகுதியில்)தொலைநகல்:22 24 66 99**

**பரம்பரைஅலகு-நவீனமயப்படுத்தப்பட்ட உணவு எனும் விடயம்பற்றி எளிமையான விளக்கம் பெறவிரும்பும் சகலர்க்கும், -எமது கோப்பையில் பரம்பரைஅலகு உணவு- எனும் தகவல்பிரசுரம் உருவாக்கப்பட்டுள்ளது.அப்பிரசுரம் விவாதத்துக்கு அடிப் படையாகவும்,கற்பிப்பு பாவனைக்கும் பொருத்தமாகலாம்.**

**இத்தகவல்பிரசுரத்தை இலவசமாக, அரசஉணவுத்தரக்கட்டுப்பாட்டு அதிகாரசபை, அச்சகவிடயபிரிவில் பெறலாம்.**
**இன்ரநெற்றிலும் இப்பிரசுரம் உண்டு:**http://www.bion.no/genmat
**அரச உணவுத்தரக்கட்டுப்பாட்டு அதிகாரசபை**

அரச தகவல்சேவையால் வழங்கப்பட்டது. அ-23-97

# Krav om merking av genmodifisert mat




## Kravet til merking av genmodifiserte matvarer gjelder fra 4. oktober 1997

**Rundskrivet som omhandler merkekravet kan fås fra Statens næringsmiddeltilsyn, trykksakekspedisjonen:**
**Telefon: 22 24 67 22 (i tidsrommet: 12.00–15.00). Telefaks: 22 24 66 99.**

***For alle som ønsker en enkel innføring i temaet genmodifisert mat, er det utarbeidet et informasjonshefte «GENmat på våre fat?». Det kan egne seg som grunnlag for debatt og til bruk i undervisning.***

**Også informasjonsheftet kan bestilles gratis fra Statens næringsmiddeltilsyn, trykksakekspedisjonen. Heftet ligger på Internett: *http://www.bion.no/genmat***

**Statens næringsmiddeltilsyn** Innrykket av Statens informasjonstjeneste. A-23/97

www.tamilarangam.net



## உணவுகளை விற்பவர், பரிமாறுபவர், கையாள்பவர் சகலர்க்கும்!

## இ.கோ. உணவுக்கட்டுப்பாட்டு முறைக்கு உட்பட்டுவிட்டீர்களா?

இ.கோ. உள்ளக உணவுக்கட்டுப்பாட்டு முறைக்கு உட்படுவதற்கு இறுதித்திகதி 1998 தை 1ம்திகதி ஆகும்.
உணவு வகைகளை விற்கும், பரிமாறும், கையாளும் சகல வர்த்தக நிறுவனங்கள், உணவகங்கள் , சுகாதார ரீதியில் உணவு பாதுகாப்பாக உள்ளதை உறுதிப் படுத்தும் முறைமையே, இ.கோ. உணவுக்கட்டுப்பாட்டுமுறையின் நோக்காகும்.
இன்னமும் இ.கோ. உணவுகட்டுப்பாட்டு முறைக்குள் பதியாதவர், உடனடியாக உங்கள் உள்ளூர் உணவுதரக்கட்டுப்பாட்டு அதிகாரசபையை தொடர்புகொள்க ! உணவுதரக்கட்டுப்பாட்டு அதிகாரசபையில் வழிகாட்டலும், முன்னேற்றதிட்ட ஒப்பந்தமும் செய்யலாம்.

சகல உணவுநிறுவனங்களும் சட்டவிதிகளை பின்பற்றி திருப்தியான வாடிக்கையாளரை பெறவும், அதிகாரிகளிடமிருந்து கடும் நடவடிக்கையை தவிர்க்குமாறும் உணவுதரக்கட்டுப்பாட்டு அதிகாரசபை வேண்டுகிறது.

**அரச உணவுத்தரக்கட்டுப்பாட்டு அதிகாரசபை**

-அரச தகவல்சேவை பிரசுரம் அ.25-97

## Til alle som selger, serverer og behandler mat:

# Er du kommet i gang med IK-MAT-systemet?



**Fristen for å ha innført internkontrollsystemet IK-MAT går ut 1. januar 1998.**

**Formålet med IK-MAT er at alle bedrifter og storhusholdninger som selger, serverer eller behandler mat skal ha et system som sikrer at maten er helsemessig trygg.**

**Ta straks kontakt med ditt lokale næringsmiddeltilsyn hvis du ennå ikke har kommet i gang med IK-MAT. Hos næringsmiddeltilsynet får du veiledning og kan avtale en framdriftsplan.**

**Næringsmiddeltilsynet ønsker at alle bedrifter som behandler mat skal følge forskriftene, og derved få fornøyde kunder og unngå tvangstiltak fra myndighetene.**

SNT Statens næringsmiddeltilsyn
*Norwegian Food Control Authority*

Innrykket av Statens informasjonstjeneste A-25/97

www.tamilarangam.net

# 1.தை 1998 இலிருந்து அமைச்சுகளில் மாற்றங்கள்

தற்போதைய திட்டமிடல்-ஒருங்கிணைப்புஅமைச்சுக்குப்பதிலாக, தொழில்-நிர்வாக அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது.இது தற்போதைய உள்ளூராட்சி-தொழில் அமைச்சிலிருந்து தொழில்பிரிவை பொறுப்பேற்கும்.உள்ளூராட்சி-தொழில்அமைச்சு,உள்ளூராட்சி-பிராந்திய அமைச்சாக மாற்றம் பெற்றுள்ளது.

திட்ட-ஒருங்கிணைப்புஅமைச்சின் முந்திய உயர்மட்டதிட்டமிடல்-ஒருங்கிணைப்பு பொறுப்பு விலக்கப்படுகிறது.தேசியதிட்டமிடலும்-நீண்டகாலதிட்டங்களும் நிதிஅமைச்சுக்கே மீளளிக்கப்படுகிறது.

அரசின் தகவல்தொழிநுட்பகொள்கையின்,பொதுவானஒருங்கிணைப்பு தொழில்துறை-வர்த்தகஅமைச்சுக்கு வழங்கப்படுகிறது.

தொழில்-நிர்வாகஅமைச்சு:முகாமை சீர்திருத்தங்கள்,முகாமையின் தகவல்தொழிநுட்ப பாவனை-அபிவிருத்தி பொறுப்பையும் தொடரும்.

## தொழில்-நிர்வாக அமைச்சு:

**தொழில்-நிர்வாகஅமைச்சர்:** எல்ட்பியோர்க் லோவர்

ஆகர்ஸ்காத்தா 59,த.பெ.8004,டெப்,0030 ஒஸ்லோ தொலைபேசி:22 24 90 90

**பிரிவுகள்:**நிர்வாகபிரிவு,தொழில்தருநர்பிரிவு,முகாமைஅரசியல்பிரிவு,வருமானபிரிவு,போட்டிஅரசியல்பிரிவு,அத்துடன்(இன்று)திட்ட-ஒருங்கிணைப்புபிரிவு.
தொழில்-நிர்வாகஅமைச்சின் செயல்முறைபரப்பாக தொழில்சந்தைக்கொள்கை,அரசசெயல்பாட்டில்நவீனமயமாக்கலும்-வினைத்திறனாக்கலும்,உள்ளக-அரசபொதுசேவைகளில் உயர்பொறுப்பும்,அரசதகவல்கொள்கை,அரசில் சம்பள-ஆளணிக்கொள்கை,விலை-போட்டிக்கொள்கை,வருமானக்கொள்கை விளங்கும்.

## உள்ளூராட்சி-பிராந்தியஅமைச்சு:

**உள்ளூராட்சி-பிராந்தியஅமைச்சர்:** ரன்கில்ட் குவேசெத் கோர்ஸ்ராட்

ஆகர்ஸ்காத்தா 59,த.பெ.8112டெப்,0032 ஒஸ்லோ தொலைபேசி:22 24 90 90

**பிரிவுகள்:**தொழில்சூழல்-பாதுகாப்புபிரிவு,வீடு-கட்டிடபிரிவு,குடியேற்றபிரிவு,உள்ளூராட்சிபிரிவு,திட்ட-நிர்வாகபிரிவு,பிராந்தியஅரசியல்பிரிவு,சாமிமக்கள்குறித்த விசாரணைப்பிரிவு.
உள்ளூராட்சி-பிராந்தியஅமைச்சு தொழில்சூழல்,பாதுகாப்புபிரச்சனைகள்,தொழில்உரிமை,சம்பளநிர்ணய சமரசம்,வீடு,கட்டிடவிடயங்கள்,மாவட்டஅபிவிருத்தி-பிராந்தியதொழில்துறைஅபிவிருத்தி,உள்ளூராட்சிபொருளாதாரம்-நிர்வாகம்,தேர்தல் நடாத்தல்,குடியேற்றக்கொள்கை,சாமிமக்கள்விடயங்கட்கு பொறுப்பாக விளங்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

1997.Des/vol.4,Nr.10/ISSN:0805-7443/e.post:nsp@c2i.net Redaktør/Utgiver:

**C-BLAD**

**SARVADESA TAMILER**

Abonnement :90kr/år

Foreign Subs.:15USD/yr

N.S.PIRABU B.Sc,Dip.Jour.,

L.Hervigsv.69A,3035Drammen,

Norway Tel/Fax.32.813416

Postgiro:05320899453

Norges Tamiltidsskrift for informasjon, kunnskap, kultur og solidaritet.

விளம்பரம்:

1. சர்வதேசதமிழர் சஞ்சிகைக்கு விளம்பரம்,சந்தா,ஆக்கங்கள் அனுப்பி ஆதரவு தரும்படி அன்புரிமையுடன் தமிழர்களை வேண்டுகிறோம். நிதிஉதவி வழங்க வசதியற்றோர் இலக்கியஉதவி அளித்து ஆதரவுதருக! கணனியில் அல்லது தட்டச்சில், ஏ–4 தாளில் ஒருபுறம் மட்டும் ஆக்கம் எழுதி உடன் அனுப்புங்கள்! விளம்பரம் வியாபாரத்துக்கு அழகு!எனும் கருத்துக்கமைய தமிழ்வர்த்தகர்கள் விளம்பரம் செய்துதவுக!
2. இதுவரை சஞ்சிகையை இலவசமாகப்பெற்றோர் தொடர்ந்து பெறவிரும்பின் கடிதமூலம் அறிவிக்கவும். தமிழ், தமிழர்சேவையே நம்பணி! என உழைக்கும் நமக்கு ஆதரவுக்கரம் தரவிரும்புவோர் 05320899453 எனும் வங்கி இலக்கத்திற்கு 90 குரோணர் செலுத்தி ஆதரவு தரலாம்! நோர்வேயில் சர்வதேசதமிழர் சஞ்சிகைக்கு தமிழ்த்தாய்மார் தரும் அமோகஆதரவுக்கு எம் இதயபூர்வமான நன்றிகள்!


# Endringer i departementene fra 1. januar 1998

Arbeids- og administrasjonsdepartementet (AAD) blir opprettet og erstatter det nåværende Planleggings- og samordningsdepartementet (PSD). AAD overtar Arbeidsavdelingen fra det nåværende Kommunal- og arbeidsdepartementet (KAD). KAD blir omdannet til Kommunal- og regionaldepartementet (KRD).

PSDs tidligere ansvar for overordnet planlegging og samordning faller bort. Ansvaret for nasjonal planlegging og langtidsprogrammet tilbakeføres til Finansdepartementet.

Ansvaret for den generelle samordningen av Regjeringens IT-politikk overføres til Nærings- og handelsdepartementet.

Arbeids- og administrasjonsdepartementet viderefører ansvaret for arbeidet med reformer i forvaltningen, herunder utviklingen av forvaltningens bruk av IT.

ARBEIDS- OG ADMINISTRASJONSDEPARTEMENTET

*Arbeids- og administrasjonsminister Eldbjørg Løwer*

Akersgt. 59
Postboks 8004 Dep, 0030 Oslo
Tlf. 22 24 90 90

***Avdelinger:***
*Administrasjonsavdelingen, Arbeidsavdelingen, Arbeidsgiveravdelingen, Forvaltningspolitisk avdeling, Inntektsavdelingen, Konkurransepolitisk avdeling og (i dag:) Plan- og samordningsavdelingen.*

AADs arbeidsområder er arbeidsmarkedspolitikken, moderniserings- og effektiviseringsarbeid i statlig virksomhet, overordnet ansvar for interne statlige fellestjenester, statlig informasjonspolitikk, lønns- og personalpolitikk i staten, pris- og konkurransepolitikk og inntektspolitikk.

KOMMUNAL- OG REGIONALDEPARTEMENTET

*Kommunal- og regionalminister Ragnhild Queseth Haarstad*

Akersgt. 59
Postboks 8112 Dep, 0032 Oslo
Tlf. 22 24 90 90

***Avdelinger:***
*Arbeidsmiljø- og sikkerhetsavdelingen, Bolig- og bygningsavdelingen, Innvandringsavdelingen, Kommunalavdelingen, Plan- og administrasjonsavdelingen, Regionalpolitisk avdeling og Avdelingen for samiske spørsmål.*

KRD har ansvaret for arbeidsmiljø- og sikkerhetsspørsmål, arbeidsrett og megling i tariffoppgjør, bolig- og bygningssaker, distriktsutbygging og regional næringsutvikling, kommunal økonomi og administrasjon, gjennomføring av valg, innvandringspolitikk og samiske saker.

Innrykket av Statens informasjonstjeneste A-27/97


3. நோர்வேதமிழர் சேவைமையம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இது தமிழ் குழந்தைகள், சிறுவர், சிறுமியர், இளைஞர், யுவதிகள், தாய்மார், முதியோர், தஞ்சம்கோருவோர்,அவதிப்படுவோர்க்கு இயன்றளவு ஆலோசனை, வழிகாட்டல், மொழிபெயர்ப்பு, தகவல்சேவையை தமிழ், நொஸ்க், ஆங்கிலத்தில் (இலவச தொலைபேசி மூலமும்) வழங்கும்.உங்கள் ஆலோசனை,அபிப்பிராயத்தை இதுபற்றி உடன்எழுதுங்கள்!
4.. நோர்வே–தமிழ் சொல்லகராதி ஒன்று வெளியிடும் நோக்கமுள்ளது. அது பற்றி வாங்க ஆர்வமுள்ளோர் தயவு செய்து தொடர்புகொள்க! உங்களின் போதிய ஆதரவு வருமாயின் மாத்திரம் வெளியிடமுடியும் !
5. தை 31 முன் சந்தா செலுத்துவோருக்கு வருமானவரி தற்பிரகடனம்(செல்வாங்கிவெல்சன்)குறித்து பல அரியஆலோசனைகள் அனுப்பப்படும்.(உ–ம்: மார்கழி 31 முன் <u>AMS, BSU</u> சேமிப்புக்கு வரிவிலக்குண்டு